Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 22 வெள்ளிக்கிழமை (07.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 068

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)
















# மாகாணசபை ஆட்சிமுறைமை அரசியல் கட்சிகள் கூடி ஆராய்வு



## புதிய சிபார்சுகள் ஜனாதிபதிக்கு

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தற்போதைய மாகாண சபை ஆட்சிமுறைமையைத் தொடர்ந்து நீடிப்பதா என்பது குறித்தும் இதில் உள்ள சாதக, பாதக நிலைமைகள் குறித்தும் அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி ஆராய்ந்துள்ளன. அமைச்சர் டக்ளஸ் தலைமையில் நேற்று மாலை இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் விரைவில் கையளிக்கப்படவிருக்கிறது.

மாலை 2.30 மணியளவில் மாகாண சபை முறைமைக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் கலந்துகொண்ட மேற்படி கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியின் குழு அறையில் இடம்பெற்றது. தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைப்பிரச்சினைக்கான தீர்வை மாகாணசபை

19 ஆம் பக்கம் பார்க்க

## வெலிக்கடையில் கைதிகள் கொலை பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும்

### ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தல்

வெலிக்கடைச் சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. வெலிக்கடைச் சிறையில் கைதிகள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் உடனடியாக நடத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது. நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதிசெய்ய தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிவித்துள்ளது. அண்மைக் காலமாக இலங்கையில் இடம்பெற்றுவரும் நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழுவில் நம்பிக்கையில்லை வெளிநடப்புச் செய்தார் ஷிராணி

(கொழும்பு)

தெரிவுக்குழுவின் விசாரணைகளில் தமக்கு நம்பிக்கையில்லை என்று தெரிவித்து பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்கா நேற்றைய விசாரணை அமர்வில் இருந்து வெளிநடப்புச் செய்துள்ளார்.

நேற்றைய விசாரணையின் போது பலபக்க ஆவணங்களை ஷிராணி பண்டாரநாயக்கவிடம் கொடுத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு, அந்த ஆவணங்கள் அனைத்தையும் (இன்று) வெள்ளிக்கிழமைக்குள் படித்து விட்டு அவை தொடர்பான கேள்விகளுக்கு இன்றே பதிலளிக்கவேண்டும் என்று வலியுறுத்தியதாகவும், அந்த ஆவணங்களைப் படித்துப்பார்க்க மேலதிக அவகாசம் கொடுக்க தெரிவுக்குழு மறுத்துவிட்டதாகவும் ஷிராணி பண்டாரநாயக்கவின் சார்பில் அஜராகும் சட்ட நிறுவனத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் தெரிவித்தார்.



மேலும், இந்த விசாரணைகளின்போது, தெரிவுக்குழு உறுப்பினர்கள் சிலர் இந்த விசாரணைகள் தொடர்பில் முன்

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலை மாணவர்கள் அறுவர் படையினரிடம் சரண்

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆறு பேர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அமிர்தலிங்கம் இராசகுமாரன் தெரிவித்தார். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஐவர் மற்றும் முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒருவர் அடங்களாக ஆறுபேர் நேற்று மாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மருத்துவ பீடத்தை சேர்ந்த ஐவர், முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவர் மற்றும் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த மூவர் என 10 மாணவர்களை விசாரணைக்கென ஒப்படைக்குமாறு பொலிஸாரால் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. இதன்படியே இம்மாணவர்கள் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் தெரிவித்தார். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## கோண்டாவிலில் ஆணின் சடலம் மீட்பு

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய சூழலில் இருந்து நடுத்தர வயதுடைய ஆணின் சடலம் மீட்கப்பட்டிருக்கிறது. உடலில் வெட்டுக்காயங்கள் காணப்படுகிறது. இவர் பயணித்ததாகக் கருதப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று சடலம் காணப்பட்ட இடத்தில் இருந்து சிறிது தூரத்தில் அனாதரவாகக் காணப்பட்டது. இச்சடலம் நேற்று இரவு பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

## வடக்கின் இறுதியுத்தம் ஆராய ஐ.நா. உபகுழு

வடக்கில் நடைபெற்ற போரில் இறுதிக்கட்ட யுத்த காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் செயற்பட்ட விதம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை குறித்து ஆராய விசேட உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்-கீ-மூனின் பேச்சாளர் மார்டின் நெசர்கி நேற்று இதனை கூறியுள்ளார். இலங்கையின் இறுதிக்கட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## நாளைய தினமுரசில்...

துறைக்குரிய முழுமையான பொறுப்பும் யாழ்மாவட்டம் உட்பட அனைத்துப் பிரதேசங்களையும் கையாளும் பணி பொட்டம்மானுக்குரிய பணியாகும். பொட்டம்மான் பார்க்க வேண்டிய வேலையை வேறொரு பிரிவினர் பார்ப்பது இயக்க நடவடிக்கைகளுக்கு

### விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் - 11



பத்திரிகையாளர் தொடர்பில் ஆராய்வதில் பரணிக்கு பெரியளவில் இடைஞ்சல்கள் இருக்காது என தமிழ்ச்செல்வன் எண்ணிக்கொண்டார். இதனைவிட பரணியிடம் இன்னொரு குணாம்சமும் காணப்பட்டது


## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(வடமராட்சி)

இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் சாவகச்சேரி மருத்து வமனையில் நேற்றுமாலை ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. முள்ளியான் - வெற்றிலைக் கேணிப் பகுதியில் இவர் நேற்று மரணமடைந்தார். இதே இடத்தைச் சேர்ந்த நவரத்தினம்

19 ஆம் பக்கம் பார்க்க

# வடமாகாண பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் விநியோகம்



(யாழ்ப்பாணம்)

2013 ஆம் ஆண்டுக்கான வடமாகாண பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் விநியோக அங்குரார்ப்பண நிகழ்வு வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

நாடு பூராகவும் நேற்று நடைபெற்ற இந்நிகழ்வுகளில் வவுனியா ரம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் நேற்று முற்பகல் 10.00 மணிக்கு வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், மூவின மாணவர்களுக்கும் இலவச பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்ற இலவச பாடநூல் விநியோக அங்குரார்ப்பண நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான இலவச பாடநூல்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

இதேவேளை, வவுனியா ரம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் வெலியோயாப் பகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனங்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் வழங்கப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## விழிப்புணர்வு பேரணி

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், பால், பால் நிலை தொடர்பான வலைப் பின்னல், யு.என்.எச்.சி.ஆர் மற்றும் டி.ஆர்.வி அமைப்புகளுடன் இணைந்து பெண்கள் வன்முறை ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி ஒன்றினை நடத்தவுள்ளது.

இன்று காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்மாகும் பேரணி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சென்றடையும்.

இதேவேளை, 2.00 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பமாகி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நிறைவுபெறும்.

பேரணியின் முடிவில் வீதி நாடக நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

## ஒளிவிழா

(வன்னேரிக்குளம்)

வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் மிகவும் சிறப்பான முறையில் ஒளிவிழா நிகழ்வுகள் நடைபெற்றன.

வித்தியாலய அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிறிஸ்தவ மதகுருமார்கள் கலந்து கொண்டனர். இதில் மாணவர்களின் கலைநிகழ்வுகள், சிறந்த மாணவர் கௌரவிப்பு என்பன இடம்பெற்றன.

சிறந்த மாணவர் கௌரவிப்பு நிகழ்வில், தரம்-11 இல் கல்விகற்கும் நடராசா சானுகா, தர்மராசா சுமன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

## ஓய்வூதிய தினங்கள் அறிவிப்பு

அரச ஓய்வூதியர்களது இம் மாதத்திற்குரிய ஓய்வூதியம் இன்று வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அப்பிரிவைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்கு 2013 ஆம் ஆண்டுக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு திகதிகளும் அவற்றுடன் 2013 ஆம் ஆண்டுக்கான நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் வாழ்த்துகளும் ஓய்வூதியர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜனவரி-10, பெப்ரவரி-8, மார்ச் 8, ஏப்ரல்-9, மே-9, ஜூன்-10, ஜூலை-10, ஆகஸ்ட்-8, செப்ரெம்பர்-10, ஒக்ரோபர்-3, நவம்பர்-8, டிசம்பர்-10 ஆம் திகதிகளிலும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

## அபிவிருத்திக் கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் நிறுவன அபிவிருத்திக் கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஆளுநர் சபைக்கூட்டம் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டம் கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் கிளை அலுவலகத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் தவறாது சமூகமளிக்கும்படி உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## கருத்தரங்கு

யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி, பேருந்துகளில் கடமையில் ஈடுபடும் சாரதி, நடத்துநர்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் போக்குவரத்து பொலிஸாராலும் நாளையும், நாளை மறுதினமும் காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

# கால்பந்து தொடரின் காலிறுதியாட்டம் இன்று

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரின் காலிறுதி ஆட்டம் மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

காலிறுதிப் போட்டியில் மோதவுள்ள அணிகள் விபரம் வருமாறு: மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியும், சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

காலை நடைபெறும் காலிறுதிப் போட்டியைத் தொடர்ந்து வெற்றிபெறும் அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டிகள் மாலை நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் - 3 இற்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நேற்று வரணி ஆசிரிய மத்திய வள நிலையத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில் நாளையும், 10 ஆம் திகதியும் அழகியல் பாடச் செயற்றிட்டச் செயலமர்வு நடைபெறும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.(11)

# தீவகப் பகுதியின் கல்வி நிலை முன்னேற்றம் கண்டு வருகின்றது

(மண்டைதீவு)

மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பாராட்டு விழா இடம்பெற்றுள்ளது. பாடசாலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவியையும் மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவிகளையும், 2011 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்பதற்கான தகுதியான மாணவர்களுக்குமான பாராட்டு விழா இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட வேலணைப் பிரதேச சபையின் தவிசாளரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசா உரையாற்றுகையில்,



எமது தீவகப் பகுதியின் கல்வி நிலை கடந்த காலங்களை விடத் தற்போது முன்னேற்றம் கண்டு வருகின்றது. இதனையிட்டு நான் பெருமகிழ்வடைகின்றேன். அந்த வகையில் மண்டைதீவுப் பிரதேசம் அபிவிருத்தி குன்றிய ஒரு பிரதேசமாக இதுவரை காலமும் இருந்து வந்தது.

ஆனால் தற்போது படிப்படியாக அபிவிருத்தியின் பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளது. இனிவரும் காலங்களில் மிகப் பெரியளவில் மண்டைதீவு அபிவிருத்தி அடையும் என்பதுடன், வீதிகள், மின்சாரம், குடிநீர் போன்ற மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகளுக்கு இயன்றவரை தற்போது தீர்வினையும் நாம் கண்டு வருகின்றோம் என்றார்.

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் கீழ் தீவகப் பகுதிகளில் இனிவரும் காலங்களில் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என்பதுடன், 2013 ஆம் ஆண்டு தீவகத்துக்கான அபிவிருத்தி ஆண்டாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண் கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சரவணபவன் மோகனரூபன் மற்றும் மேற்படி பாடசாலையின் அதிபர் க.கனகரத்தினம் ஆகியோர் உரையாற்றுகையில்,

மண்டைதீவுப் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்காக அனைத்துக் கூட்டங்களில் குரல் கொடுக்கும் ஒரேயொருவர் சிவராசா தான் எனத் தெரிவித்தனர். (02)

## அரவம் தீண்டியது

(நயினாதீவு)

நயினாதீவு 5 ஆம் வட்டாரப் பகுதியில் முதியவர் ஒருவர் அரவம் தீண்டிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

அதே பகுதியைச் சேர்ந்த இ.சந்திரசேகரம் (வயது-66) என்பவரே அரவக் கடிக்கு இலக்காகிய நிலையில் நயினாதீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. (175)

## மருத்துவ முகாம்

(குருநகர்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம் சுகாதாரக் கருத்தரங்கும், நோய்த்தடுப்பூசி ஏற்றலும் என்னும் மருத்துவ முகாமொன்றை இலவசமாக நடத்தவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாச்சிமார் கோவில் கல்யாண மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறும்.

அனைத்து அங்கத்தவர்களும் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (68)

# பரிசளிப்பு விழாக்கள்

மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி க. சரவணபவன் தலைமையில் மானிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், வலிகாமம் வலய ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆலோசகர் திருமதி நளினி அகிலதாஸ், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன நிதியியல் ஆலோசகர் வே.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும், பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது. (104)

◈ ◈ ◈ ◈ ◈ ◈

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில், மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி இராஜேஸ்வரி சத்தியசீலன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

## சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

**உறுப்புரை 6**

ஒவ்வொருவரும் எவ்விடத்திலும் சட்டத்தின் முன்னர் ஓர் ஆளாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உரிமையுடையவர்.

# காணிகளுக்கூடாக மண் அணை; வீட்டுத்திட்டத்தை இழக்கும் நிலை

## - கொக்குத்தொடுவாய் கிராம மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொக்குத்தொடுவாய் கிராம அலுவலர் பிரிவுகளில் மக்களுடைய காணிகளை ஊடறுத்துச் செல்லும் பாரிய மண் அணைகள் இதுவரை அகற்றப்படாமையால் தாம் காணிகளை பிரித்தெடுக்க முடியாதுள்ளதாக அக்கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இக்கிராம அலுவலர் பிரிவுகளில் கொக்குத்தொடுவாய் வடக்கு, மத்தி, தெற்கு என 3 கிராம அலுவலர் பிரிவுகள் காணப்படுவதுடன், இப்பிரிவுகளில் மக்கள் மீள் குடியேறி ஒரு வருடம் கழிந்துள்ள நிலையில் தமது காணிகளை சுத்தப்படுத்தி வாழ்ந்து வருகின்றனர்.

எனினும் இந்த மக்களுடைய காணிகளுக்குள் எல்லை போட முடியாத அளவிற்கு பாரிய மண் அணைகள் காணப்படுவதாகவும், இதனால் தமது காணிகளை பிரித்தெடுக்க முடியாதுள்ளதாகவும் அத்துடன் அரசாங்கத்தினாலோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினாலோ வழங்கப்படும் வீட்டுத் திட்ட வசதிகளையும் தாம் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வீட்டுத்திட்டத்தைப் பெறுவதற்கு காணிகள் எல்லைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் காணி உறுதியின்படி காணி இருந்தால் மட்டுமே வீட்டுத்திட்டம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீள்குடியேறி கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வரும் தமக்கு இவ்வாறான வீட்டுத்திட்ட உதவிகள் கிடைக்காது போவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இம்மண் அணை பாரிய அளவில் காணப்படுவதால் இயந்திரங்களின் உதவியுடனேயே அகற்றப்பட வேண்டிய நிலை காணப்படுகிறது எனவும் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு பலமுறை தாம் தெரியப்படுத்தியும் இவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே இது தொடர்பாக உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து பாரிய மண் அணைகளை அகற்றித்தருமாறு இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (04)

## "சமூக வலுவூட்டலுக்கான கல்வி" யாழ்.விஞ்ஞான சங்கத்தின் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் கடந்த காலங்களில் நடாத்தி வந்ததைப் போன்று இவ்வருடமும் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையே 'சமூக வலுவூட்டலுக்கான கல்வி' என்ற கருப்பொருளுக்கு அமைவாக விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளது.

இதன்படி வினாவிடைப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 23 ஆம் திகதியும், கட்டுரைப் போட்டியும் பேச்சுப் போட்டியும் பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதியும், வினாவிடை இறுதிப் போட்டி 20 ஆம் திகதியும், கண்காட்சிப் போட்டி (சுவரொட்டிப் போட்டி, சித்திரப்போட்டி, விஞ்ஞானப் புத்தாக்கம் உள்ளடங்கலாக) மார்ச் மாதம் 01 ஆம் திகதியும், விபரணப்படப் போட்டி பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதியும், பாடசாலைத் தோட்டப் போட்டி பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

போட்டிகள் நடைபெறும் இடங்கள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. போட்டியாளர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கலாநிதி.பா.நிமலதாஸன், உதவிப் பொதுச் செயலாளர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், கணக்கியல் துறை, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் [illegible] ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



அச்சுவேலி ஆரம்ப பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் வே.குணசீலன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களான யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், அச்சுவேலி மத்திய கல்லூரியின் அதிபர் வே. அரசகேசரி, அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் திருமதி பு. கணபதிப் பிள்ளை ஆகியோர் வரவேற்கப்படுவதைக் காணலாம்.

# முத்தையன்கட்டு கிராமத்தில் சமூக சீர்கேடுகள் அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முத்தையன்கட்டு கிராம சேவையாளர் பிரிவில் சமூக சீர்கேடுகள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் என்பன அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கிராம அலுவலர் பிரிவில் தொடர்ச்சியாக சட்டவிரோத கசிப்பு, கள் விற்பனை, போதைப்பொருள் கஞ்சா பாவனை போன்ற பல சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும், இதனால் குடும்ப வன்முறை, சமூக விரோதச் செயல்கள் என்பன இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இச்சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துமாறு இக்கிராமத்திலுள்ள பொது அமைப்புக்கள் பலதரப்பினருக்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தியும் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அமைப்புக்களும், பொது மக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இச்சட்டவிரோத செயற்பாடுகளால் இளம் சிறார்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கும் இக்கிராம மக்கள், இச்செயற்பாட்டை முற்று முழுதாக தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த நடவடிக்கையை விரைவாக எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றனர். (04)

# போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் சனி, ஞாயிறு தினங்களில் கிராம அலுவலர் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் நடைபெற்று வருகிறது

காலை 9 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரையும் நடைபெறும் இப் பயிற்சி வகுப்புக்கள் மாவட்டச் செயலகத்தைச் சேர்ந்த உதவித்திட்டமிடல் பணிப்பாளர்களான கேதீஸ்வரன் . கௌரிதாசன் ஆகியோரும் மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், ஆசிரியர் லோகேஸ்வரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு நடைபெறுகிறது.

மாணவர்களுக்கு விளக்கக் குறிப்புக்கள் . மாதிரி வினாவிடைகள் என்பன வழங்கப்படுகிறது. கிளிநொச்சியின் முன்னாள் அரசாங்க அதிபர் தி. இராசநாயகத்தின் ஒழுங்கமைப்பில் இவ் வகுப்புக்கள் நடைபெற்று வருகிறது. பங்குபற்ற விரும்பும் மாணவர்களை உடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

# முன்னாள் போராளியை காணவில்லையென முறையீடு

(பொலிகண்டி)

வல்வெட்டித்துறை - ஊறணி வைத்தியசாலைப்பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் தங்கிநின்றவேளை கடந்த சனிக்கிழமை முதல் காணாமற் போயிருப்பதாக அவரின் சகோதரியினால் கொட்டாஞ்சேனை மற்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவுக்கு வேலை வாய்ப்பின் நிமித்தம் செல்வதற்காக கொழும்பு - கொட்டாஞ்சேனை விடுதியில் தங்கியிருந்த சிவசம்பு பிரசாத் (வயது - 24) என்பவரே காணமற் போனவராவார். (116)

# சாவகச்சேரி நூலகங்கள் நடத்திய மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் பொதுநூலகங்கள் இணைந்து தமது எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்திய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் விபரம் வருமாறு.

**கட்டுரை**

**கீழ்ப் பிரிவு**

இ.தவினுகன் (சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), சி.அபிசன் (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), கு.தினோஜா (டிறிபேக் கல்லூரி)

**மத்திய பிரிவு**

இ.ஹறினி (விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் மீசாலை), சி.டனுஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ச.கிறிஸ்துஜா (டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி).

**மேற்பிரிவு**

ஆ.அஜித்தா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ம.தயாளினி (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்), ம.விஜிகரன் ( சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**அதிமேற்பிரிவு**

நா.கோதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), க.வனஜா (டிறிபேக் கல்லூரி), ப.அனுசா (டிறிபேக் கல்லூரி)

**வாசிப்பு**

**கீழ்ப்பிரிவு**

பா.அஜிசாந் (அமிர்தாம்பிகை வித்தியாலயம் நுணாவில்), நா.சரண்ஜா (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), கோ.யகீர்த்தா (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை).

**மத்திய பிரிவு**

ப.வேணுகா (விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் மீசாலை), இ.ஹறினி (விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் மீசாலை), த.கீர்த்தனா (விக்னேஸ்வரா ம்கா வித்தியாலயம் மீசாலை).

**பொது அறிவு திறந்த போட்டி**

நா.கஜிதரன் (வீரபத்திரர் கோயிலடி கச்சாய் வீதி சாவகச்சேரி), நா.தர்மினி (வீரபத்திரர் கோயிலடி கச்சாய் வீதி சாவகச்சேரி), எம்.மாலதி (மந்துவில் மேற்கு, கொடிகாமம்)

**சித்திரம்**

**கீழ்ப்பிரிவு**

ம.ஹம்சவர்சன் ( சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை), ச.ரேபேத் ( மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்), ச.லதுஷிகன் (சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை).

**மத்திய பிரிவு**

நி.றமேஷ் (டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி), பா.பாரத் (டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி), தே.மேரிசுகன்ஜா (டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி).

**மேற்பிரிவு**

சு.சுசாந் (டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி), ப.அனோஜன் (டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி), சி.கீதாஞ்சன் (டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி). (11)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## கருத்துச் சுதந்திரமும் சமூக மாற்றமும்

கருத்துச் சுதந்திரம், தணிக்கை பற்றியெல்லாம் இன்று புதிய பல கேள்விகள் உருவாகிவிட்டன.

ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரம் இருக்கிறது; உரிமைகள் இருக்கின்றன – அடுத்தவரைப் பாதிக்காத வரையில். எல்லையற்ற சுதந்திரம் உண்டாக்கும் பாதிப்புகளை அறிந்துகொண்டுதான் தடைகளையும் விதிகளையும் மனிதகுலம் உருவாக்கிக் கொண்டது.

இன்றைய இணையத்தள வளர்ச்சியோடு கருத்துச் சுதந்திரம் கொடிகட்டிப் பறக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். சமூக வலைத்தளங்கள் இந்த அளவுக்கு வளர்ச்சி பெறும் என்றோ மக்களிடம் தவிர்க்க முடியாத அங்கமாக மாறும் என்று சில ஆண்டுகள் முன்புவரை யாரும் கற்பனை செய்துகூட பார்த்திருக்க முடியாது. இது செய்திப் பரவலில் ஏற்பட்டுள்ள பெரிய புரட்சி. மத்திய கிழக்கு நாடுகளில் புரட்சி வெடிப்பதற்கும் ஆட்சி மாற்றங்கள் நடப்பதற்கும் ஃபேஸ்புக் போன்ற இணைய தளங்களே காரணம் என்று ஆகிவிட்டன.

பழைய ஊடகங்களில், அதாவது அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் முன்தணிக்கை சாத்தியம். இந்தப் புதிய தொழில் நுட்பத்தின் தன்மை முன்தணிக்கையைச் சாத்தியமில்லாமல் செய்து விடுகிறது. எனவே இதில் பங்கு பெறுபவர்கள் மிகவும் சுதந்திரமாகத் தம் கருத்துக்களை எந்தத் தடையும் இன்றி உடனுக்குடன் பதிவேற்றம் செய்து, அது அடுத்த கணமே உலகெங்கிலுமுள்ள பார்வையாளர்களுக்குக் காணக் கிடைக்கிறது. எழுதுபவர்கள் உடனடி எதிர்வினையையும் பெறமுடிகிறது.

தமிழ்நாட்டில் அண்மையில் பின்னணிப்பாடகி சின்மயியும் அவரது தாயாரும் பொலிஸில் கொடுத்த புகார் பிரபலமானது. இணைய உலகமே இரண்டு பிரிவாக பிரிந்து நின்று விவாதித்தது. எதையும் எழுதலாம் தணிக்கை செய்ய யாருமில்லை என்ற சுதந்திரத்தைச் சிலர் பொறுப்பின்றிக் கையாளும்போது சிக்கல் வருகிறது. அவதூறுகள் பேசுவது, பெண்களாயின் பாலியல் ரீதியாகச் சீண்டுவது, அவர்களது ஒழுக்கத்தைக் கேள்விக்குள்ளாக்குவது என்று சட்டம் தலையிட வேண்டிய நிலைக்கு இட்டுச் செல்கிறது.

இன்றைய இணையதளங்கள், யார் கேட்டாலும், எந்தத் தகவலை வேண்டுமானாலும் கொடுக்கிறது என்பது பல அரசாங்கங்களுக்கு தலையிடியாகிவிட்டது. சீனாவில் பல இணையத்தளங்கள் ஏற்கனவே அரசால் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. இலங்கையிலும் அண்மையில் சில தளங்கள் தடைசெய்யப்பட்டன. அதற்கு எதிராக வழக்கும் போடப்பட்டது. இணையத் தளங்கள் தடைசெய்யப்படுவதன் மூலம் மக்களின் தகவல் அறிந்துகொள்ளும் உரிமை பறிக்கப்படுவதாகவும், அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் அந்த வழக்கு மனுவில் சொல்லப்பட்டுள்ளது.

அரசை, தலைவர்களை மட்டுமின்றி சாதி, மதம், இனம், மொழி ரீதியாகவும் கீழ்த்தரமான அவதூறான கருத்துக்கள் வலைத்தளங்களில் கொட்டப்படுகின்றன. பத்திரிகையில் தொலைக்காட்சியில் தவறான, அவதூறான கருத்துகளுக்காக சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க சட்டங்கள் இருக்கும்போது இணையம் மட்டும் விதிவிலக்காக எதையும் பேசலாம் என்பதில் நியாயம் இல்லை என்பது அரசுகளின் வாதம். இதை எதிர்ப்பவர்கள், கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்ற அடிப்படை உரிமைகளை அரசுகள் நசுக்கப் பார்ப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

பொறுப்புடனும் சுய தணிக்கையுடனும் செயற்பட்டால் இந்தச் சமூக வலைத் தளங்கள் எதிர்காலத்தில் சமூகமாற்றத்தில் முக்கிய பங்காற்ற வாய்ப்புண்டு. ஆனால் இவை அவற்றின் சமூகப் பொறுப்பை உணர்ந்து செயற்படாமல் போனால் சமூகச் சீரழிவுகளுக்கு அவை காரணமாகலாம் என்பதிலும் ஐயமில்லை.

- ஆசிரியர்

# அனைத்து பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பு வழங்கப்படும்

## அமைச்சர் செனவிரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பு வழங்கப்படும் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

பட்டதாரிகள் சிலருக்கு நியமனக் கடிதங்களை வழங்குவதற்காக நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அமைச்சர் செனவிரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அனைத்து பட்டதாரிகளுக்கும் எதிர்காலத்தில் தொழில்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

அரச சேவை என்பது மக்களுக்கான சேவை எனத் தெரிவித்த அமைச்சர் அலுவலகங்களுக்கு வரும் ஊழியர்கள் வீடுகளில் இருப்பதைப் போன்று இருந்தால் எவ்வித பயனும் இல்லை எனக் கூறியுள்ளார்.

பிரதேச செயலகம் ஒன்றில் ஆறு ஊழியர்கள் அண்மையில் கரம் விளையாடிக்கொண்டிருந்ததாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்த அவர், குறைந்தபட்சம் 8 மணித்தியாலங்களாவது மக்களுக்கான சேவையை உரிய முறையில் வழங்குமாறு அரச ஊழியர்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# உண்டியல் திருட்டில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது

(நயினாதீவு)

நயினாதீவு பிரதேசத்தில் அண்மையில் ஆலயமொன்றில் உண்டியலை திருடிய நபர்கள் நயினாதீவு பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டனர்.

அண்மையில் நயினாதீவு 4ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள பத்திரகாளி சரூமத வீரபத்திரர் ஆலயத்தில் இருந்த உண்டியலை உடைத்து திருடர்கள் பணத்தை களவாடிய நிலையில் இது தொடர்பாக ஆலய நிர்வாகத்தால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனை அடுத்து நயினாதீவு பொ்லிஸார் 2 நபர்களை புங்குடுதீவுப் பகுதியில் வைத்து கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் இத்திருட்டுச் சம்பவத்துடன் 4 சந்தேகநபர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இரு நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றின் முன் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விசாரணையின் பின்னர் ஒருவர் வயது குறைந்தவர் என்பதால் எச்சரிக்கை செய்யப்பட்டும் மற்றைய நபர் 25 ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் விடுதலை செய்யப்பட்டனர்.

குறித்த இருவரும் நயினாதீவுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (175)

# தமிழ் இலக்கிய விழாவில் ஆளுநர் விருது பெறுவோர்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தமிழ் இலக்கியப் பெருவிழா நாளையும் நாளை மறுதினமும் யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் இரு தினங்களும் காலை நிகழ்ச்சிகளாக முற்பகல் 9.00 மணிக்கு "வடமாகாண தமிழ் இலக்கியத்தின் செல் நெறிகள்" என்னும் தலைப்பில் ஆயவரங்கம் நடத்தப்படவுள்ளது. மாலை நிகழ்ச்சிகளாக தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகள் ஆற்றுகை இடம்பெறவுள்ளது.

இரண்டாம் நாள் மாலை 2.30 மணிக்கு பண்பாட்டுப் பேரணியும், அதனைத் தொடர்ந்து 'நல்லதம்பி சிவசுப்பிரமணியம்' அரங்கில் 2011 ஆம் ஆண்டுக்கான சிறந்தநூற் பரிசுத் தேர்வு விருது மற்றும் 2012 ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருது என்பன வழங்கப்படவுள்ளன.

இதன்படி ஆளுநர் விருது பெறும் கலைஞர்களான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருளப்பு பேகமன் (நாட்டுக்கூத்து) ம.ந.கடம்பேஸ்வரன் (இலககியம்), புலவர் ம.பார்வதிநாதசிவம் (கவிதை), வ.செல்லத்துரை இசை (வாய்ப்பாடு), செ. இராசா இசை (முகர்சிங்), கிளிநொச்சியைச் சேர்ந்த த.ஜெகநாதன் (இலக்கியம்), முல்லைத்தீவைச் சேர்ந்த மயில்வாகனம் தவமணி (நாடகம்), மன்னாரைச் சேர்ந்த சந்தியா அந்தோனி மிரண்டா (கவிதை) ஆகியோருக்கு ஆளுநர் விருது வழங்கப்படவுள்ளது. மேலும் வவுனியாவைச் சேர்ந்த எம்.பதுகே குணதிலக (சிற்பம்), எம்.ஏ.மொகமட் ஷரிப் (பாரம்பரிய மருத்துவம்), ம.பொனிப்பஸ் நெரியநாதன் (நாட்டுக்கூத்து) ஆகியோருக்கும் இவ்விருது வழங்கப்படவுள்ளது.

# மனித உரிமைப்பேரவையில் இலங்கைக்கு உச்சளவு உதவி

## ரஷ்யா உறுதியளிப்பு

அடுத்த வருடம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமை பேரவை கூட்டத் தொடரின் போது, தமது நாட்டின் பிரதிநிதி பேரவையில் அங்கம் வகிக்காத போதிலும் இலங்கைக்கு உச்சளவிலான உதவியை வழங்குவதற்காக ஏனைய நட்பு நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுத் தரும் என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் அலெக்சாண்டர் ஏ. கர்வாவா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விமல் வீரவன்சவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் ரஷ்யா அங்கம் வகிக்காது. எனினும் 2014 ஆம் ஆண்டு பேரவையில் அங்கம் வகிக்க ரஷ்யா எதிர்பார்த்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சர்வதேச அழுத்தங்களின் போது, இலங்கைக்கு எவ்விதமான அநீதியும் ஏற்படும் வகையில் ரஷ்யா செயற்படாது. 2013 ஆம் ஆண்டில் ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் அங்கம் வகிக்காத போதிலும், தன்னுடன் நெருங்கிய நட்புறவை கொண்டுள்ள நாடுகளுடன் கலந்துரையாடி இலங்கைக்கு தேவையான ஒத்துழைப்பை ரஷ்யா வழங்கும். பிரேசில் உட்பட பல நாடுகள் அங்கம் வகிக்கும் பிரிக் அமைப்பின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளவும் ரஷ்யா தயாராக உள்ளது எனவும் ரஷ்யத் தூதுவர் கூறியுள்ளார்.

# தென்பிராந்திய வான்பரப்பில் காணப்பட்ட அதிசயக்கோள்

(கொழும்பு)

முன்னொருபோதும் காணாதளவு பிரகாசத்துடன் கூடிய கோள் ஒன்றை தென்பிராந்திய வான்பரப்பில் காணமுடிந்ததாக அம்பலாந்தோட்டை பிரதேசவாசிகள் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணியளவில் காணக்கூடியதாக இருந்த மேற்படி கோளானது, மிகப்பெரிய நட்சத்திரம் போன்று அதிகளவு பிரகாசத்துடன் தோற்றமளித்துள்ள போதிலும் நள்ளிரவு 12 மணியளவில அதன் பிரகாசம் சாதாரண நட்சத்திரத்தின் பிரகாசமளவுக்கு குறைவடைந்ததாகவும் பிரதேசவாசிகள் குறிப்பிட்டனர்.

அத்துடன், மேற்படி கோள் நேற்று அதிகாலையளவில் தொலைதூரத்துக்கு பயணமாவதை அவதானிக்க முடிந்ததெனவும் அம்மக்கள் தெரிவித்தனர்.

சாதாரண கண்களால் பார்க்குமிடத்து அக்கோள் மினுமினுப்பதைப் போன்றும் கமராவொன்றின் மூலம் பார்க்குமிடத்து இளம் நீல நிற ஒளியுடன் அது தொலைதூரத்துக்கு பயணித்துக்கொண்டிருப்பதைப் போன்றும் தோற்றமளிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சிவகரன் கட்டுரையிலிருந்து



**இவர்களின் ஒரே தேவை யாழ்ப்பாணத்தில் அமைதி குலையவேண்டும். மாணவர்கள் கல்வியைத் துறந்து போராட வேண்டும். ஆனால் திரு. சரவணபவன் மட்டும் தனது மகளை பவுத்திரமாக மகிந்தவின் உதவியுடன் அமெரிக்காவில் படிக்கவைத்து ஒரு வைத்தியராக்கி அமெரிக்காவில் வதிவுரிமையும் எடுத்து விடுவார். கவிஞர் காசி ஆனந்தன் 70களில் இளைஞர்களை உசுப்பேத்தும் கவிதை எழுதி அனைவரையும் இயக்கத்திற்கு அனுப்பி பலியாக்கினார். ஆனால் அவரது மகளை மட்டும் இந்தியாவில் படிக்கவைத்து திருமணமும் செய்து வைத்து விட்டார்.**

# பொல்லைக் கொடுத்துக் கொடுத்து மீண்டும் மீண்டும் அடி வாங்கும் தமிழினம்!

1983 இனக்கலவரத்தை, நாம் எடுத்த ஒரு முட்டாள் தனமான நடவடிக்கை தான் ஒரு சிறு பொறி போல் தூண்டியது என்பதை யாரும் மறுக்க முடியாது. திரு நெல்வேலி அதாவது இன்று பிரச்சினை நடந்த யாழ். பல்கலைக் கழகத்தின் அதே பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் நடை பெற்ற ஒரு பொறுப் பற்ற கெரில்லாத் தாக்கு தல்தான் 83 இனக்கல வரத்தைத் தூண்ட காரணமாயிருந்தது. அன்று நாம் கெரில்லா யுத்தம் என்று தமிழர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்க ஆரம்பித்த போராட்டம் நம்மையே தாக்க நாம் இலங்கை அரசிடம் எடுத்துக் கொடுத்த ஒரு பொல்லு. இனக்கலவரம் என்ற பெயரில் அதே பொல் லால் நாம் மிக மோச மாக அடி வாங்கினோம்.

கலவரத்தின் பின் தமிழினம் அழிவதா? புறப்படு தமிழா போருக்கு! என்று ஆயிரக்கணக்கில் இளைஞர்களை பெரும் போருக்கு அணி திரட்டினோம். ஆயுதப் பயிற்சியை இந்தியாவில் பெற்றோம். நான்கு ஆண்டுகள் கழித்து நடந்தது என்ன? நமக்குப் பயிற்சி அளித்த அதே இந்திய இராணுவத்தாலேயே நாம் மோசமாகத் தாக்கப்பட்டோம். திருந்தினோமா? அடி வாங்கிய வலி மாற முன்பே மீண்டும் ஒரு மாபெரும் பெரிய பொல்லைத் தயார் செய்தோம்! அது தான் புலிகளின் மரபு இராணுவப்படை! சுமார் 22 வருடங்களாக மரபு இராணுவத்தைக் கட்டி பொலிஸ், இராணுவம், கடற்படை, வான்படை என்று பல வடிவுகளில் பொல்லுகளை தயார் பண்ணினோம். நடந்து முடிந்தது என்ன? சாதாரண துப்பாக்கிகளுடன் திரிந்த பொலிஸுக்கு நாங்கள் தான் நவீனரக துப்பாக்கி என்ற பொல்லையும் கொடுத்தோம். ஊருக்கு வெளியே முகாமில் இருந்த இராணுவத்தை போராட்டம் என்ற பொல்லைக் கொடுத்து எங்கள் வீட்டு வாசலில் கொண்டு வந்து நிறுத்தினோம். ஆர்பிஜி என்ற பொல்லை எடுத்து நாம் அடிக்க நாம் அவர்கள் ஆட்லறி என்ற பொல்லை எடுத்து எம் வீடுகளையும் சொத்துகளையும் துவம்சம் பண்ணிவிட்டு போனார்கள்!

முஸ்லிம்கள் காலம் காலமாக வாழ்ந்த நிலங்களை விட்டு அடித்துத் துரத்திய இனச்சுத் திகரிப்பு என்ற பெரிய பொல்லுத் தான் இன்று எங்களையும் சுத்திகரிக்க வைக்கிறது. பொல்லை நாங்கள் இப்ப சிங்கள முஸ்லிம் மக்களுக்கு கூட்டாக கொடுத்து விட்டு இரு தரப்பிடமும் வாங்கிக் கட்டுகிறோம். ஆனால் இன்னும் திருந்து வதாக தெரியவில்லை! இறுதி யுத்தம் என்று நாம் எடுத்த அதே பொல்லுத் தான் முள்ளிவாய்க் காலில் எம்மை சம்ஹாரம் செய்து எமது ஆயுதப் போராட்டத்தையும் அடியோடு நிர்மூலமாக்கியது. இந்தப் பொல்லுக்கொடுத்து அடி வங்குவது ஒன்றும் எமக்கு 1983இற்கு பின்னர் வந்தது அல்ல!

சாதி வெறி என்ற பொல்லை முதலில் தம் வசம் வைத்திருந்ததும் இந்த யாழ். வேளாள சமூகமே! அதே பொல்லை வாங்கி சிங்கள-பௌத்த பேரின வாதம் என்ற பெயரில் தமிழருக்கு அடிபோட்டார்கள் சிங்கள இனவாதிகள். இவ்வளவு நடந்த பின்னரும் நாம் திருந்தினோமா? இல்லை. எம்மை நாமே அழிப்பதற்கு தினம் தினம் திட்டமிட்டு வகைவகை யான பொல்லுகளை இன்றும் தயாரிக்கிறோம்.

மாவீரர் தினம் புலிகளின் போராளிகளுக்கு மட்டுமே நினைவு கூரும் ஒரு தினம்! ஆனால் இன்றும் மற்றைய இயக்க போராளிகள் துரோகிகள். அவர்களை இந்தத்தினத்தில் நினைவு கூர முடியாது என்று புலிவால்கள் அடம்பிடிக்கிறார்கள். இறந்த போராளிகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மலர் வைத்து அஞ்சலி செய்யும் உரிமையை யாரும் மறுக்க முடியாது. ஆனால் மாவீரர் நாளைக் கொண்டாட நாம் எமது கல்வியை பணயம் வைக்க வேண்டுமா? 30 ஆண்டுகள் போராட்டம் தமிழ் சமூகத்தின் கல்வியை கருவறுத்துச் சென்றுவிட்டது.

தமிழ் மக்களின் எதிர்காலம் சூனியமான ஒன்றாக புலிகளால் விட்டுச்செல்லப்பட்டுள்ளது. இவர்கள் கொண்டாட நினைத்த அந்த மாவீரர்கள் தம் கல் வியை இழந்து தமிழ் மக்களின் எதிர்காலத்தை எண்ணித் தானே தம் இன்னுயிர்களை அர்ப்பணித் தார்கள். அவர்களிற்கு நாம் இன்று செய்யக் கூடிய சிறப்பான ஒரு மரியாதை அவர்கள் நேசித்த மக் களின் எதிர்காலத்தை கட்டியெழுப்பவதே. அதற்கு முதல் படிக்கல் கல்வி. யுத்த அழிவின் பின் தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு அத்திவாரமாக அமைய வேண்டிய மிக முக்கியமான ஒரு விடயம் கல்வி. ஆனால் ஒரு மாவீரர் தினத்திற்கு விளக்கேற்ற அந்த கல்வியை மீண்டும் தாரைவார்க்கப் போகிறோமா?


யாழ். பல்கலைக்கழகத்தில் அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் யாருக்கும் விளக்கேற்றும் உரிமை இருக்கிறது. ஆனால் இன்று இவ்வளவு பிரச்சினை வர விளக்கேற்றிய யாழ். பல் கலைக்கழகம், அவர்களது முற்றத்திலேயே சகோதர படுகொலை செய்யப்பட்ட சக போராளிகளிற்காக என்றாவது ஒரு சிறிய மெழுகுதிரியை ஏற்றி இருப்பார்களா? 1980களில் புலிகளின் மிக மோசமான அடக்கு முறைக்கு உள்ளான யாழ். பல்கலைக்கழகம், அவர்கள் எத்தனை பேரை பலியாக்கினார்கள் என்பதை ஒரு போதும் நினைப்பது கிடையாது. புலிகளால் கொல்லப்பட்ட விரிவுரை யாளர்கள் மாணவர்கள், இவ்ர்களை இன்றைய யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மறந்து விட்டார்கள். காரணம் இவர்கள் புலிகளால் துரோகி கள் என்று அநியாயமாக கொலை செய்யப்பட்ட வர்கள். ஆனால் படித்தவர்கள் அற்ற ஒரு சமூகமாக எங்களை ஆக்கிவிட்ட அவர்களிற்காக தம் கல்வியையே தாரை வார்க்கத் தயராக இருக்கிறார்கள். இந்த மாணவர்களுக்கு, தம்மைப் பெற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி கவலையில்லை!

ஆனால் யாழ். பல்கலைக்கழக மாண வர்களை நாம் முற்றாக குற்றம் சொல்ல முடியாது. காரணம் இன்று பல்கலைக் கழத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலே வேதவாக்காக உள்ளது. புலிகளின் தற்கொலை அரசியலைத் தற்போது தன்கையில் எடுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று இன்னுமொரு பொல்லை தயாராக்கி வருகிறது. திருவாளர் சரவணபவன் அவர்கள் அன்று அமிர்தலிங்கம் செய்த அதே வேலை-யை இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் செய்கிறார். பின்னணியில் புலம் பெயர் புலி அமைப்புகளுடன் கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரன் ஆகியோர் உள்ளனர். இவர்களின் ஒரே தேவை யாழ்ப்பாணத்தில் அமைதி குலைய வேண்டும். மாணவர்கள் கல்வியைத் துறந்து போராட வேண்டும். ஆனால் திரு. சரவணபவன் மட்டும் தனது மகளைப் பவுத்திரமாக மகிந்தவின் உதவியுடன் அமெரிக்காவில் படிக்கவைத்து ஒரு வைத்தியராக்கி அமெரிக்காவில் வதிவுரிமை யும் எடுத்து விடுவார். கவிஞர் காசி ஆனந்தன் 70களில் இளைஞர்களை உசுப்பேத்தும் கவிதை எழுதி அனைவரையும் இயக்கத்திற்கு அனுப்பி பலியாக்கினார். ஆனால் அவரது மகளை மட்டும் இந்தியாவில் படிக்கவைத்து திருமண-மும் செய்து வைத்து விட்டார். தமிழ் மக்களின் அன்றைய தலைவர்கள் அனைவரும் அதைத் தான் செய்தார்கள்.

பல்கலைக்கழக மாணவர்கள் உண்மையில் தமிழ் மக்களின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டவர்களாக இருந்தால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை நம்புவதை முதலில் நிறுத்த வேண்டும். புலம் பெயர் புலிகளின் தொடர்பை அடியுடன் துண்டிக்கவேண்டும். மாவீரர்களிற்காக தினமும் உங்கள் மனதில் தீபமேற்றுங்கள்.

அவர்களின் கனவை நனவாக்கும் ஒரே ஒரு ஆயுதம் கல்வி! கல்வி மட்டுமே. வீணாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் புலம் பெயர் புலி ஊடகங்களின் உசுப்பேத்தல் என்ற பொல்லை கையில் வாங்கி மீண்டும் அதே பொல்லால் அடி வாங்கி உங்கள் எதிர் காலத்தையும் தமிழ் மக்களின் எதிர் காலத்தையும் நசுக்காதீர்கள்.

# அதிகரித்துச் செல்லும் கணனி குற்றச்செயல்கள்



(கொழும்பு)

அரசாங்க மற்றும் பல்வேறு நிறுவனங்களின் கணனிகள் தொடர்பான குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதனால் கணனி பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியுள்ளது என பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

உபாயத்தை வகுத்துக் கொள், திட்டமிடு, செயற்படுத்து, வினைத்திறன் மிக்க பாதுகாப்புக்கான வழி என்ற கருப்பொருளில் நேற்றுமுன்தினம் நடந்த கணனி பாதுகாபபு பற்றிய தேசிய மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முக்கிய தகவல்களைத் திருடவும் நிதியைக் கையாடவும், அப்பாவி மக்களை மோசடித் திட்டங்களால் ஏமாற்றிப் பணம் பறிக்கவும், தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பை முழுதாக அழித்துவிடவும் கணனிசார் குற்றச்செயல்களை மேற்கொண்டு வருகின்றன என அவர் தெரிவித்தார்.

கடன் அட்டை, வரவட்டை பற்றிய தகவல்களை திருடுவதற்கு உபகரணங்களைக் கடைகளிலும் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரங்களிலும் குற்றச் செயலில் ஈடுபடுபவர்கள் பொருத்தி வருவதனால் நிதி சேவைகளில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன என அவர் கூறினார்.

# ஊழல் மோசடிகளில் இலங்கை 79 ஆவது இடம்

(கொழும்பு)

ஊழல் மோசடிகள் தொடர்பான தரவரிசையில் இலங்கை 79 ஆவது இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஊழல் மோசடிகள் தொடர்பான மக்களின் மனோநிலையைக் கருத்திற்கொண்டு இந்தக் கணிப்பீடு நடத்தப்பட்டுள்ளது. 176 நாடுகளில் இலங்கை 79 ஆவது இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுத்துறையில் இடம்பெறும் ஊழல் மோசடிகளின் அடிப்படையிலேயே இந்தச் சுட்டெண் தயாரிக்கப்பட்டுள்ளது. குறைந்த புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் நாட்டில் அதிகளவு ஊழல் மோசடிகள் இடம்பெறுவதாகவும், அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளில் அதிகளவு மோசடிகள் இடம்பெறுவதாகவுமே அர்த்தப்படுகின்றது.

இந்தத் தர வரிசையில் 40 புள்ளிகளுடன் இலங்கை 79 ஆம இடத்தையும், 39 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட சீனா 80 ஆம் இடத்தையும் வகிக்கின்றது. இந்த தரவரிசையில் டென்மார்க், பின்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் முதலாம் இடத்தை வகிக்கின்றன.

# ஆபத்து ஏற்பட்டால் துமிந்தவே பொறுப்பு

## கூறுகிறார் ஹிருணிகா



(கொழும்பு)

தனக்கோ அல்லது தனது ஆதரவாளர்களுக்கோ எதாவது ஆபத்துக்கள் ஏற்பட்டால் அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சிலவாவும் அவரது ஆதரவாளர்களுமே பொறுப்பு என ஹிருணிகா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எனக்கோ எமது ஆதரவாளர்களுக்கோ உடல் ரீதியான ஏதாவது காயங்கள் ஏற்பட்டால் அதற்கு துமிந்தவும் அவரது ஆதரவாளர்களுமே பொறுப்புக் கூறவேண்டும்.

அண்மையில் கொலன்னாவைப் பகுதியில் நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டமொன்றை நடத்தியதனைத் தொடர்ந்து எமது அலுவலகம் இனந் தெரியாதோரால் தாக்கப்பட்டது. எனினும் இது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்த வேண்டும். இருப்பினும் இவ்வாறான செயற்பாடுகளை செய்வது துமிந்தவின் ஆதரவாளர்கள் என்று ஜனாதிபதிக்கு நன்கு தெரியும் எமது வீட்டின் மீது சிலர் கற்களை வீசியும கழிவுகளை வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றார்.

இதேவேளை கடந்த ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது ஏற்பட்ட மோதலில் காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஆசிவேண்டி நேற்றுமுன்தினம கொத்தொட்டுவ கந்தே விகாரையில் வழிபாடுகள் நடைபெற்றன.

இதற்கு எதிரப்புத் தெரிவித்து கொலன்னாவ பிரதேசத்தில் ஹிருணிகா தலைமையிலான சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன்போது ஹிருணிகாவின் ஆதரவாளர்கள் துமிந்த சில்வாவுக்கு ஆசி வேண்டி நடத்தப்பட்ட வழிபாடு தொடர்பான விளம்பரங்கள் சிலவற்றையும் அடித்து நொருக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஐந்து பிள்ளைகள் பெற்றால் சிங்களக் குடும்பங்களுக்கு பரிசு



(கொழும்பு)

சிங்களக் குடும்பங்களில் பிள்ளைகள் பிறப்பது குறைநதுளள தன் காரணமாக எதிர்காலத்தில் குறைந்தது 5 பிள்ளைகளைப் பெறும் சிங்களக் குடும்பங்களுக்கு பணப்பரிசு வழங்கப்படும் என பிரான்ஸ் நாட்டுக்கான பிரதான சங்க நாயக்கர் பரவாஹெர சந்தரத்தன தேரர் தெரிவித்துளளார்.

இந்தத் திட்டம் அடுத்த வருடத்தில் இருந்து அமுலுக்கு கொண்டு வரப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். சிங்களக் குடும்பங்கள் குழந்தைகளைப் பெற்றெடுப்பது குறைந்துள்ளதால், எதிர்காலத்தில் மிகவும் பாரதூரமான நிலைமையை எதிர்நோக்க நேரிடும் எனவும் இந்துப் பாதிப்பு பௌதத மதத்திற்கும் கெடுதியை உண்டு பண்ணும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களக் குடும்பங்களில் பிள்ளைகள் இல்லாது போனால், துறவறம் பூணவும் பிள்ளைகள் இல்லாமல் போகும் எனவும் இதனால், நேபாளம், பங்களா தேஷ் போன்ற நாடுகளில் உள்ள பௌத்தர்களுக்கு ஏற்படட நிலைமை இங்கும் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிலைமையானது சிங்கள இனத்தின் பாரிய அழிவுக்கு வழி கோலும் என்பதால், தான் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் பரவாஹெர சந்தரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்தியாவின் பாதுகாப்புக் கற்கைகள் மறறும் ஆய்வு நிறுவனத்தின் பகுப்பாய்வாளர அரவிந்த் குப்தாவுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சந்திப்பில், இருதரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இந்த சந்திப்பின் போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா மற்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மின் உற்பத்தி நிலையங்கள் 60 மில்லியன் ரூபா கடனில்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை உள்ளிட்ட தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு சுமார் 60 மில்லியன் ரூபாவைச் செலுத்த வேண்டியுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

'கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய காலம் நிறைவு பெற்றுள்ளதுடன், இந்த நிலுவைத் தொகையை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்துமாறு இலங்கை மின்சார சபைக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட அதிகாரி கூறினார்.

இலங்கை மின்சார சபை மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான எரிபொருளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# அரசின் வீடமைப்பு கொள்கை மக்களை ஏமாற்றும் செயல்

## என்கிறார் சஜித் எம்.பி.



(கொழும்பு)

அரசாங்கத்தின் வீடமைப்பு கொள்கை மக்களை ஏமாற்றும் வகையில் அமைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும், மேலும் சில தேர்தல்களிலும் அரசாங்கத்திற்கு மக்கள் வாக்களித்த போதிலும், மக்களின் வீட்டுக் கனவை நனவாக்க அரசாங்கம் தயாரில்லை.

மகிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டங்களில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. ஒவ்வொரு ஆண்டிலும் கிராமமொன்றில் தலா 25 வீடுகளை அமைத்துக கொடுப்பதாக ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நாட்டில் 33347 கிராமங்கள் காணப்படுகின்றன. ஆனால் அரசாங்கம் உரியமுறையில் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

# கைதிகளிடம் வாக்குமூலம்

வெலிக்கடை சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற சம்பவத்திற்கான காரணத்தைக் கண்டறிவதற்காக சிறைச்சாலையிலுள்ள அனைத்து கைதிகளிடமும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இதுவரையில் சில சிறைக்கைதிகளிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள 3,600 சிறைக் கைதிகளிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவுள்ளன. இதேவேளை, வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வி.எஸ்.விதானகே குறிப்பிட்டார்.

# விசாரணைகளைப் பார்வையிடுவதற்கு கண்காணிப்பாளருக்கு அனுமதியில்லை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கண்காணிப்பாளர்களை விசாரணைகளைப் பார்வையிட அனுமதிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நாடாளுமன்றத் தெரிவுக்குழு நிராகரித்துளளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளை பார்வையிட பொதுநலவாய நாடுகள் அமைப்பு மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் சட்டத்தரணிகளினால் இந்தக் கோரக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும், இந்தக் கோரிக்கையை நாடாளுமன்றத் தெரிவுக்குழு நிராகரித்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணங்கள் தமக்குக் கிடைக்கப்பெறவில்லை என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகள் பக்கச்சார்பற்ற முறையிலும், நீதியான வகையிலும் நடாத்தப்படுவதற்கு இவ்வாறு மூன்றாம் தரப்பினரின் கண்காணிப்பு அவசியமானது என பிரதம நீதியரசரின் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மாற்று வலுவுடையோர் தினவிழா

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் விசேட கல்வி வள நிலையம் நடத்தும் மாற்று ஆற்றலுள்ளோர் தின விழா நடைபெறவுள்ளதாக விசேட கல்வி வளநிலையப் பொறுப்பாளர் ந.முருகானந்தன் அறிவித்துள்ளார்.

இந்த விழா சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயப் பணிப்பபாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு, பிரதம விருந்தினராக வடமாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயக் கணக்காளர் திருமதி த.அனந்தகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிவபூமி பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்து வருதல் , வலயக் கீதம் இசைத்தல், விசேட கல்விக் கீதம் இசைத்தல், விருந்தினர் உரை, கலைநிகழ்வு என்பன நடைபெறவுள்ளன. (06)

## ஐயனார் ஆலயத்தில் கற்பூர தீப உற்சவம்

(நயினாதீவு)

நயினாதீவில் உள்ள மலையின் ஐயனார் ஆலயத்தில் ஐயப்ப விரத பூசைகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

இதில் கற்பூர தீப உற்சவம் நாளை சனிக்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் 18 படி திருவிளக்கு பூசை என்பன பக்திபூர்வமாக ஐயப்ப அருட்கடாட்சம் பெற்ற யோக குருசாமி தலைமையில் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (175)

# பிரதேசத்தின் கலைகளை வளர்த்தெடுப்பதில் மூத்த கலைஞர்களின் பங்களிப்பு சிறப்பானது

(கிளிநொச்சி)

எமது பிரதேசத்தின் மூத்த கலைஞர்கள் யுத்த சூழலுக்குள்ளும் கலைகளை வளர்ப்பதற்காக தங்களுடைய நிறைவான பங்களிப்புக்களை செய்துள்ளனர் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதிதலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



கடந்த, இரண்டாம் திகதி கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில், இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட கலாசார விழாவில் பிரதம விருந்தினராகக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறைந்தளவான வளங்களுடன் எங்களுடைய பிரதேசங்களில் நிறைவான பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன மீள்குடியேறிய, இந்த குறுகிய காலத்திற்குள், இங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்களை மனச்சாட்சியுள்ள அனைவரும் நன்கறிவர். நாளுக்குநாள் எமது பிரதேசங்களில் முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாகவே எங்களுடைய கலை கலாசாரங்களை பாதுகாக்கும், இது போன்ற நிகழ்வுகளாகும்.

எமது கலைஞர்கள் பல நெருக்கடியான காலகட்டங்களிலும் தங்களுடைய துறைகளை வளர்ப்பதில் மிகுந்த பங்களிப்புச் செய்துள்ளனர், இன்று கௌரவிக்கப்பட்டுள்ள அறுபது வயதிற்கு மேற்பட்ட மூத்த கலைஞர்கள் பாராட்டுக்குரிய அதேவேளை அவர்கள் மேலும் பல கலைஞர்களை, இந்த சமூகத்திற்காக உருவாக்கி விட வேண்டும். அதே வேளை இலைமறைகாயாக உள்ள கலைஞர்களையும் வளர்த்துவிட வேண்டும். எமது கலை பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்க எடுக்கப்படும் எல்லா நடவடிகைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கத்தயாராக, இருப்பதாகவும் தெரிவித்தார்.

மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில், இடம்பெற்ற நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ஸ்ரீனிவாசன்,உதவி அரச அதிபர் தலைமைப்பீடம் திருமதி ஜெயராணி, பிரதேச செயலர்களான நாகேஸ்வரன், சத்தியசீலன், முகுந்தன், வசந்தகுமார் மற்றும் திணைக்களங்களின் உயரதிகாரிகள் கலைஞர்கள் பொதுமக்கள் குருகுல சிறுவர் இல்ல சிறார்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# இந்து சமய ஆசிரியர்களுக்கு கருத்தரங்கும், செயலமர்வும்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 12, 13 வகுப்புக்களில் இந்து நாகரிகம், இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இச்செயலமர்வு நாள்ள மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கிலும், செயலமர்விலும் 'பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தல்' எனும் விடயம் பற்றி சைவப்புலவர், ஆசிரிய ஆலோசகர் என்.பி.ஸ்ரீந்திரன், 'நவீன இந்து மதச் சீர்திருத்த இயக்கங்கள்' எனும் விடயம் பற்றி அதிபர் க.மகேந்திரன், 'இந்து அறிவியல்' எனும் விடயம் பற்றிச் சிவத்தமிழ் வித்தகர் சி.சிவமகாலிங்கம் கருத்துரை வழங்கவுள்ளனர்.

பாட ஆசிரியர்கள் தவறாது கருத்தரங்கிலும், செயலமர்விலும் பங்குபற்றச் செய்வதற்கு அதிபர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (06)

# முரசின் இன்றைய பலன்

(07.12.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 22 ஆம் திகதி. நட்சத்திரம் உத்தரம் பின்னிரவு 3.10 வரை. திதி நவமி பின்னிரவு 03.05 வரை.
இராகுகாலம் 10.47 - 12.17 வரை. சுபநேரம் 6.17 - 7.47 வரை. சித்தாமிர்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | செயல்களில் கருணை. அவமதித்தவர்களும் அன்பு பாராட்டுவர். தொழில், வியத்தகு முன்னேற்றம். ஆதாய பணவரவு. புத்திரர் விரும்பியது தருவீர்கள். |
| ரிஷபம் | பணி தாமதம் ஆவதால் சஞ்சலம். நல்லோரின் ஆலோசனையில் மாற்றுவழி. தொழில், சீராக தகுந்த பணிபுரிவீர்கள். அளவான பணவரவு. |
| மிதுனம் | முன்யோசனையுடன் செய்தவை வெற்றியைத்தரும். தொழில், சீரான வளர்ச்சி. அளவான பணவரவு. உறவினர் அனுசரணை. சேமிப்பை பயன்படுத்துவீர்கள். |
| கடகம் | புதிய நட்பு உருவாகும். பலருக்கு உதவி மகிழ்வீர்கள். தொழில், செழிக்க அனுகூலம். பணவரவில் முன்னேற்றம். விரும்பிய பொருள் வாங்குவீர்கள். |
| சிம்மம் | குறைசொல்லி கோபமூட்டுவர். அளந்து பேச நன்மை. தொழிலில், புதிய நுணுக்கம். பணவரவு சுமார். கடன் பெறுவீர்கள். பிள்ளைகளிடம் கண்டிப்பு. |
| கன்னி | சிறிய செயலும் கடினமாகும், உறவினர் களிடம் விமர்சனம் வேண்டாம். தொழில், நிதான நடைமுறை. அளவான பணவரவு. சிக்கனம். |
| துலாம் | மனதில் உற்சாகம். வேலையில் கூடுதல் பொறுப்புணர்வு. தொழில், இடையூறு விலகும். உபரி பணவரவு. சேமிப்பீர்கள். பொதுவிஷயங்களில் ஈடுபாடு. |
| விருச்சிகம் | வேண்டாத நபரை சந்திப்பீர்கள். பழைய நினைவுகள் தொந்தரவு. அதிக வேலை. பணவரவு குறைவு. உடல்நலம் சிரமப்படுத்தும். அரச உதவியில் தாமதம். |
| தனுசு | ஆன்மிக ஈடுபாடு. விவேகமுடன் நடந்தால் சோதனைகள் விலகும். அதிக உழைப்பு. பணவரவு சீராகும். மங்கல நிகழ்வுக்கு திட்டம். |
| மகரம் | நியாய, தர்ம உணர்வு. சான்றோர்கள் உதவி. தொழிலில், கடும் முயற்சி. பணவரவும், நன்மையும் கூடும். இல்லறத்துணை விருப்பம் நிறைவேற்றுவீர்கள். |
| கும்பம் | சொந்த நலனில் அக்கறை. தேவைகள் நிறைவேற அனுகூலம். தொழில், வளர்ச்சி பெற உழைப்பு. செலவு கூடும். மருத்துவ சிகிச்சை. போக்குவரத்தில் கவனம். |
| மீனம் | நம்பிக்கை அதிகரிக்கும். அதிக உழைப்பால் தொழில் முன்னேற்றம். ஆதாய பணவரவு. சமூக அந்தஸ்து உயரும். விருந்து உபசரிப்பு. இல்லறத்துணை. |

# கோப்பாய் பிரதேச செயலகத்தினால் அச்சுவேலியில் நடமாடும் சேவை

(அச்சுவேலி)


நடமாடும் சேவை மூலம் பிறப்பத்தாட்சிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் அச்சுவேலியில் நடைபெறவுள்ளது.

இதுவரைகாலமும் பிறப்பத்தாட்சிப் பத்திரம் இல்லாத அல்லது தொலைத்தவர்கள் இந்த நடமாடும் சேவை ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அச்சுவேலி - பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்தில் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரதீபன் தலமையில் நடைபெறும். இவ் நடமாடும் சேவையில் அச்சுவேலி வடக்கு, தெற்கு, மேற்கு, பத்தைமேனி, தம்பாளை கதிரிப்பாய், இடைக்காடு, வளலாய் கிராம அலுவலர்களுக்கு உட்பட்ட மக்கள் கலந்து கொண்டு இதுவரை காலமும் கிடைக்கப் பெறாத சான்றிதழைப் பெறமுடியும் என வடக்கு கிராம சேவையாளர் கே.கதிரமலை நாதன் தெரிவித்தார்.


மேலும் அன்றைய தினம் பிறப்புச் சான்றிதழைப் பெற வருமிடத்து. ஒருவருட தேடுநர் விளைவு, தாய் தந்தையின் பிறப்புச்சான்றிதழ், சம்பந்தப்பட்டவரது திருமணசான்று அல்லது தாய் தந்தையின் திருமணசான்று, பாடசாலையில் கல்வி கற்றதை உறுதிப்படுத்தும் அதிபரின் கடிதம், வாக்காளர் பட்டியல், கிராம அலுவலரின் கடிதம், குடும்ப அட்டை போட்டோ பிரதி, தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி, சகோதரர்களது பிறப்புச் சான்றிதழ், மற்றும் காலம் கடந்த பிறப்பு படிவம் சமாதான நீதவான் கையொப்பம். போன்றவற்றை எடுத்துவருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(எம். ஆர்)



நெல்சிப் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுவரும் சாவகச்சேரி நகரசபைக் கட்டடத்தைக் காணலாம். (90)

# குக் சதம்; இங்கிலாந்து பலமான ஆரம்பம்




(கொல்கத்தா)

குக்கின் சிறப்பான சதத்துடன் இந்திய அணிக்கெதிரான கொல்கத்தா டெஸ்ட்டில் இங்கிலாந்து அணி பலமான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.


இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி கொல்கத்தாவில் நடைபெற்று வருகின்றது.

இதில், முதல் இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. இரண்டாம் நாள் ஆட்டத்தில் இந்திய அணி யின் விக்கெட்டுக்கள் வேகமாகச் சரிந்தவேளையிலும் அணித் தலைவர் டோனி அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். இறுதியில் இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 316 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சச்சின் 76, டோனி 52, கம்பீர் 60 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பனிசர் நான்கு, அன்டர்சன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் இங்கிலாந்து அணி குக்கின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் பலமான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது. நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இங்கிலாந்து அணி ஒரு விக்கெட்டை இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அணித் தலைவர் குக் 236 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 19 பவுண்டரிகள் அடங்கலாக 136 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளார். டெஸ்ட் அரங்கில் குக் அடித்த 23ஆவது சதமாக இது பதிவானது. அத்துடன் குக் 88 ஓட்டங்களைப் பெற்றவேளை 7000 ஓட்டங்களை டெஸ்ட் அரங்கில் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மற்றும் கம்ப்ரென் 57 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் ஓஜா ஒரு விக்கெட்டை விழ்த்தினார். ஒன்பது விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இங்கிலாந்து அணி 100 ஓட்டங்களால் பின்னிலை வகிக்கின்றது. இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

இதேவேளை, இங்கிலாந்து அணிக்கெதிரான கொல்கத்தா டெஸ்ட் போட்டியின் முதலாவது இனிங்ஸில் சச்சின் 76 ஓட்டங்களைப் பெற்றவேளை, சர்வதேச போட்டி களில் (டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டி) 34,000 ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சச்சின் ஆட்டம் பிரமிப்பாக இருந்தது



(கொல்கத்தா)

டெண்டுல்கர் சதம் அடிக்காவிட்டாலும் அவரது ஆட்டம் சிறப்பாக இருந்தது. இது மிகவும் அபாரமான ஆட்டங்களில் ஒன்றாக இல்லாவிட்டாலும் பிரமிப்பாக இருந்தது. அண்டர்சன் வேகப்பந்து வீச்சை எதிர்கொண்ட போது டெண்டுல்கர் தனது கால்களை சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதனால் அவரது பந்தில் ஆட்டம் இழந்தார் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

இங்கிலாந்து சுழற்பந்தை எதிர்கொள்வதில் அவருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்த சிறப்பான ஆட்டம் மூலம் டெண்டுல்கரின் நம்பிக்கை மேலும் அதிகரிக்கும். தொடர்ந்தும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என நம்புகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீரர்கள் தாக்குதல் உயிரிழந்தார் நடுவர்




நெதர்லாந்தில் உள்ள ஹக்நகரில் இடம்பெற்ற ஜுனியர் கால்பந்தாட்ட போட்டியின்போது வீரர்களின் தாக்குதலுக்கு இலக்காகிய பக்க நடுவராக கடமை யாற்றிய அந்நாட்டைச்சேர்ந்த ரிச்சர்ட் நியூவென் குய்ஜன் (வயது-41) உயிரிழந்தார்.

இப்போட்டியில் அம்ஸ்டர்டாம் கழகத்துக்கு எதிராக தீர்ப்பு வழங்கியதால் அக்கழகத்தைச் சேர்ந்த வீரர்கள் மேற்படி நடுவரைத் தாக்கியுள்ளனர்.

இந்நிலையில் தாக்குதலுக்கு உள்ளான நடு- வரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனு மதித்ததையடுத்து அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மரணம் சம்பவித்தமைக்கான காரணம் உறுதியாக அறிவிக்கப்படாத நிலையில் சந்தேகத்தின் பேரில் அம்ஸ்டர்டாம் கழகத்தைச் சேர்ந்த 15, 16 வயதுடைய 3 வீரர்கள் கைது செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது போன்ற சம்பவங்கள் இனி வரும் காலங்களில் நிகழாத வண்ணம் எமது கால்பந்தாட்டச் சம்மேளனம் நடவடிக்கை எடுக்கும் என்றும், உயிரிழந்த கால்பந்து நடுவருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதாக நெதர்லாந்து கால்பந்து சம்மேளனம் தெரிவித்துள்ளது.




# அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் பங்கேற்க மறுக்கும் நடால்

(மாட்ரிட்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பங்கேற்க முடியாது என ஸ்பெயின் வீரர் நடால் தெரிவித்தார். ரென்னிஸ் அரங்கில் நான்காம் இடத்தில் உள்ளார் ஸ்பெயினின் நடால், (வயது- 26). இதுவரை 11 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற இவர் இடது முழங்கால் காயம் காரணமாக, விம்பிள்டன், யு.எஸ். ஓப்பன், லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கவில்லை. சமீபத்தில் பயிற்சியை தொடக்கிய இவர், அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிசில் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இது குறித்து நடால் கூறுகையில், தற்போது காயம் குணமாகி வருகிறது மகிழ்ச்சியாக உள்ளது. 100 சதவீத உடற்தகுதி ஏற்பட்டால் மட்டுமே, போட்டியில் விளையாடுவேன். இல்லையெனில், மீண்டும் ஆறு மாதமோ அல்லது ஒரு ஆண்டிற்கு பின்னரே, காயமடைய நேரிடும். இதனால், அவுஸ்ரேலிய ஓப்பன் டென்னிஸில் பங்கேற்க முடியாது என்றார்.

# கலேரோ காலமானர்



கொலம்பிய முன்னாள் கால்பந்தாட்ட வீரர் மிகுவெல் கலேரோ காலமானார். 41 வயதுடைய அவர் திடீர் சுகவீனத்தால் காலமான-தாக அவரது குடும்ப வைத்தியர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். கொலம்பியா கால்பந்தாட்ட அணியில் பிரவேசித்த மிகுவெல் பின்னர் மெக்ஸிக்கோ கழகத்திற்காக விளையாடினார். கொலம்பிய கால்பந்தாட்ட அணியின் கோல் காப்பாளராக சில வருடங்கள் செயற்பட்ட அவர், பல வெற்றிகளுக்கு பங்களிப்பு வழங்கினார். மெக்ஸிக்கோ லீக் கால்பந்தாட்டத்தை சுவீகரித்த அணியில் கோல் காப்பாளராக விளையாடிய பெருமையும் மிகுவெல்லுக்கு உள்ளது. 'கன்படரேசன்' கிண்ணத்தை சுவீகரித்த அணியிலும் இடம்பிடித்த மிகுவெல் 2001 ஆம் ஆண்டில் கால்பந் தாட்டத்திலிருந்து ஓய்வுபெற்றார்.

# ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்குமா இந்தியா?

இந்திய மத்திய அரசு விளையாட்டு விதிகளின் படி செயற்பட்ட, இந்திய ஒலிம்பிக் சங்கத்தை, சர்வதேச ஒலிம்பிக் ஆணையகம் தடை செய்துள்ளது. இதனால் ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய அரசின் புதிய விளையாட்டு விதியின் படி, இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்கு தேர்தல் நடக்கவுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள சர்வதேச ஒலிம்பிக் ஆணையகம் சர்வதேச ஒலிம்பிக் விதிகளின் படி தான் தேர்தல் நடத்த வேண்டும் என்று அறிவித்துள்ளது.

கொமன்வெல்த் ஊழலில் சிக்கி சிறை சென்ற கல்மாடி, வி.கே. வர்மா, லலித் பனோட் ஆகியோர் போட்டியிடக் கூடாது எனவும், இந்த அறிவித்தலை மீறினால் இந்திய ஒலிம்பிக் சங்கத்தை தற்காலிகமாக தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சர்வதேச ஒலிம்பிக் ஆணையகம் எச்சரித்துள்ளது.

இதனை இந்திய ஒலிம்பிக் சங்கம் கவனத்தில் கொள்ளவில்லை. ஆரம்பத்தில் இருந்தே, மத்திய அரசின் விதிக-ளின் படி தேர்தலை நடத்த ஏற்பாடு செய்தமையே தற்போதைய தடைக்கு காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


# மக்கலம் கப்டன்?

நியூசிலாந்து அணியின் புதிய தலைவராக பிரெண்டன் மக்கலம் நியமிக்கப்படலாம் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. தற்போதைய தலைவராக ரொஸ் ரெய்லர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டே பிரெண்டன் மக்கலம் நியமிக்கப்படலாம் எனக் கருதப்படுகிறது. நியூசிலாந்து அணியின் தற்போதைய தலைவரான ரொஸ் ரெய்லருக்கும், பயிற்றுவிப்பாளர் மைக் ஹெசனுக்குமிடையிலான கருத்து வேறுபாடுகளை அடுத்து, நியூசிலாந்து அணியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுமாறு ரொஸ் ரெய்லருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. புதிய தலைவராக பிரெண்டன் மக்கலம் நியமிக்கப்பட்டால் எதிர்வரும் டிசெம்பர் 21ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ள தென்னாபிக்க அணியுடனான 3 ருவென்ரி-20 போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் அடங்கிய தொடரில் அணித்தலைவராகச் செயற்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சாமுவேல்ஸ் சதம் வென்றது மே.தீவுகள்

(மிர்பூர்)

சாமுவேல்சின் அதிரடி சதம் கைகொடுக்க, பங்களாதேஷ் அணிக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பங்களாதேஷிற்குச் சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி 5 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது. மூன்றாவது போட்டி மிர்பூரில் நேற்று முன்தினம் பகலிரவு ஆட்டமாக நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி 49.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரகீம் 38, தமிம் இக்பால் 22, மகமதுல்ல 52, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுனில் நரைன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.எளிய இலக்கைத் துரத்திய மேற்கிந்தியத்தீவுகள் அணி கெய்ல் (4) அதிர்ச்சி கொடுத்தார். பாவெல் (47) அரைச்சத வாய்ப்பை இழந்தார். மறுமுனையில் அசத்திய சாமுவேல்ஸ், சர்வதேச ஒருநாள் அரங்கில் 4ஆவது சதம் கடந்தார். இவர் 126 ஓட்டங்களில் (17 பவுண்டரி, 2 சிக்ஸ்) வெளியேறினார்.இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 47 ஓவர்களில், 6 விக்கெட் இழப்பிற்கு, 228 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இருப்பினும், ஒருநாள் தொடரில் 2-1 என பங்களாதேஷ் அணி முன்னிலையில் உள்ளது.



# கிண்ணம் வென்றது கொக்குவில் கே.சி.சி.சி.



(யாழ்ப்பாணம்)

யாழ். நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய 'நியூஸ்ரார் பிறிமியர் லீக்' ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கொக்குவில் கே.சி.சி.சி. அணி கைப்பற்றிக் கொண்டது.

நியூஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்தில் உள்ள 16 விளையாட்டுக்கழங்களுக்கு இடையில் நியூஸ்ரார் பிறிமியர் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியை நடத்திவந்தது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும், மானிப்பாய் பரிஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயரூபன் 43, ராகுலன் 20, உமாகாந் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் வினோத், சுபாஸ், நிதர்சன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 162 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் பரிஸ் அணி, கொக்குவில் கே.சி.சி.சி. அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் மானிப்பாய் பரிஸ் அணி 20 ஓவர்கள் நிறை வில் 90 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 71 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் வினோத் 36, துவாரகன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் கிருபவன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

போட்டியின் தொடர் நாயகனாகவும்,சிறந்ததுடுப்பாட்ட வீரராகவும் சென்றல் அணியைச்சேர்ந்த வி.றஜீவ்குமாரும் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராகவும் இறுதிப்போட்டியின் சிறந்த பந்துவீச்சாளராகவும் கே.சி.சி.சி. அணியைச் சேர்ந்த எஸ். கிருபவனும் இறுதிப்போட்டியின் நாயகனாகஅதே அணியைச் சேர்ந்த ஏ.ஜெயரூபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# இலைமறை காயாக உள்ள வீரர்களை இனங்காண ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இலைமறை காயாக உள்ள வீரர்களை இனங்காணும் வகையில் கால்டன் விளையாட்டு வலையமைப்பு (Carlton Sports Network) ஆறாவது வேலைத்திட்டத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. இதில் பாடசாலை மாணவர்கள் முதல் கழக மட்டம் மற்றும் தனிப்பட்ட ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இவ்வமைப்பு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, CSN Champs என்பது நாடு முழுவதுமுள்ள திறமையான விளையாட்டு வீர,வீராங்கனைகளை இனங்கண்டு, அவர்களுக்கு தேசிய அளவில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு வேலைத் திட்டமாகும். இதில் திறமையான விளையாட்டு வீர,வீராங்கனைகள் ஒரே இடத்தில் இன்று சேர்க்கப்பட்டு விஞ்ஞான ரீதியில் அவர்களது திறமைகள் இனங்காணப்படும்.

முதற் கட்டமாக, கிரிக்கெட், கால்பந்து, றகர், வலைப்பந்து, கரப்பந்து மற்றும் ஹொக்கி ஆகிய விளையாட்டுக்களில் திறமையான வீர, வீராங்கனைகளை மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்து அவர்கள் மாகாண ரீதியில் ஒன்று சேர்க்கப்பட்டு, தேசிய குழுக்களில் இணைத்துக்கொள்வதற்கான தேசிய சங்கங்களுக்கு அறிமுகம் செய்யப்படுவர்.

திறமை வாய்ந்தவர்களின் தெரிவானது, அந்தந்த விளையாட்டுக்களுக்கான தேசிய பயிற்றுவிப்பாளர்களினால் மேற்கொள்ளப்படும். தேசிய சங்கத்தினால் பெயர் குறிப்பிடப்படும் தேர்ச்சி பெற்ற பயிற்சியாளரினால் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறையின் பின்னரே தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

இந்த வேலைத் திட்டம் கல்வி அமைச்சினதும், விளையாட்டுத்துறை அமைச்சினதும் முழுமையான ஒத்துழைப்புடன் இலங்கை கிரிக்கெட், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம், இலங்கை றக்பி, இலங்கை வலைப்பந்து சம்மேளனம், இலங்கை கரப்பந்து சம்மேளனம் ஆகிய தேசிய சம்மேளங்களின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படும் ஒன்றாகும்.

CSN Champs வேலைத் திட்டமானது, இதுவரை மாத்தறை, பதுளை, குருநாகல் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றுள்ளதுடன், இதன் ஆறாவது வேலைத் திட்டம் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ். துரையப்பா விளையாட்டு மைதானங்களில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது அந்தந்த விளையாட்டுக்களில் திறமை காட்டும் வீர,வீராங்கனைகளுக்கான தெரிவுகள் நடைபெறுவதுடன், திறமைசாலிகளிடையே போட்டிகள் நடத்தப்பட்டு மிகத் திறமையானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இவ்வேலைத்திட்டத்தில் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விளையாட்டுக்களில் திறமைகளை வெளிப்படுத்தும் 15 வயதுக்கு மேற்பட்ட வீர, வீராங்கனைகளை இதில் இணைத்துக்கொள்ள முடியும். ஒரு பாடசாலையில் இருந்து விரும்பியளவு மாணவ, மாணவிகள் கலந்து கொள்ள முடியும்.

பாடசாலை மாணவர்கள் பாடசாலை ஊடாக தங்களது பதிவுகளை மேற்கொண்டு பங்குகொள்ள முடியும் எனவும், கழகத்தினர் அந்தந்த விளையாட்டுச் சங்கத்தின் ஊடாக பதிவுகளை மேற்கொண்டு பங்குகொள்ள முடியும். இதில் தனிப்பட்ட வீரர்கள் பங்குகொள்ள விரும்பினால் பயிற்சி முகாம் அன்று நேரடியாக வந்து தமது பதிவுகளை மேற்கொண்டு கலந்துகொள்ள முடியும், இதில் 15 வயது முதல் 22 வயதினரே பங்குபற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படும் இடத்து 0718513337 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு விபரங்களை அறிந்துகொள்ள முடியும். (எஸ்.பி.)

# அரையிறுதியில் ஆனைக்கோட்டை யூனியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதிக்கு ஆனைக்கோட்டை யூனியன் அணி தகுதிபெற்றுள்ளது.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் அணியும் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணியும் மோதின.

போட்டி ஆரம்பித்து 2ஆவது நிமிடத்தில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் வீரன் கஜானன் கோல் போட்டார். போட்டியின் 35ஆவது நிமிடத்தில் ஆனைக்கோட்டை யூனியன் வீரர் சத்தியதீபன் பதில் கோலினைப் போட்டு ஆட்டத்தினைச் சமப்படுத்தினார். முதல் பாதி ஆட்டத்தில் 1 : 1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் போட்டி நிறைவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் புதிய உத்வேகத்துடன் விளையாடிய ஆனைக்கோட்டை யூனியன் அணி எதிரணியின் கோல் கம்பங்களை ஆக்கிரமித்தது. இந்த நிலையில் ஆனைக்கோட்டை யூனியன் அணியின் ஸ்ரீபன்ஸ் அடித்த கோல் மூலம் 2 : 1 என்ற கோல் கணக்கில் ஆனைக்கோட்டை யூனியன் அணி வென்று அரை யிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

## விளையாட்டுச் செய்திகள்

# றக்பி பயிற்சி முகாம்



(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் றக்பி மற்றும் கால்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 12 வயதுப் பிரிவு அணியினருக்கான றக்பி பயிற்சி சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இலங்கை றக்பி சங்கத்தின் அதிகாரிகளின் நேரடியான வழிநடத்தலின் கீழ் நடைபெற்ற மேற்படி பயிற்சியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென்.அன்ரனீஸ் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் அணிகள் பங்குபற்றியிருந்தன.

# கிண்ணம் வென்றது அராலி சில்வெஸ்ரர்



(அராலி)

வலிகாமம் மேற்கு பிரதேசசபையால், உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பிரதேசசபைக்கு உட்பட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் அராலி சில்வெஸ்ரர் அணி கிண்ணம் வென்றது.

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான இந்தச் சுற்றுப்போட்டியில் 10 அணிகள் பங்குபற்றின.

சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் அராலி சில்வெஸ்ரர் அணியும் அராலி.பாரதி அணியும் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் அராலி சில்வெஸ்ரர் அணி ஒரு கோல் போட்டு முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் மேலும் இரண்டு கோல்களை அராலி சில்வெஸ்ரர் அணி போட்டது. இறுதியில் 3 – 0 என்ற கோல் கணக்கில் அராலி சில்வெஸ்ரர் அணி சம்பியனாகியது.

# அடக்குமுறையை கேட்டு வாங்குவது எதற்காக?

**- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.**

நவம்பர் 27 என்பது தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் மாவீரர் தினத்தை அனுஷ்டித்த நாளாகும். இம்முறையும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் அந்த மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க முற்பட்டமையே மோதல் நிலைக்கு காரணமாகியது என்பது தான் உண்மை. சிலர் இதனை மறுக்கலாம். ஆனால் அது தான் உண்மை.

மாணவர்கள் போரின் போது உயிரிழந்த தமது உறவினர்களை நினைவுகூர முற்பட்டார்கள் என்றும் அது தவறில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியிருந்தார். வேறு சிலர் பாதுகாப்புத் தரப்பினர் கார்த்திகை தீபமேற்ற முற்பட்டவர்களையும் தடுத்ததாக கூறியிருந்தனர். இரண்டும் உண்மையாக இருக்கலாம். ஆனால் நவம்பர் 27ஆம் திகதி என்பது புலிகளுக்குரிய தினமாகும். மாணவர்கள் புலிகளையே நினைவு கூர்ந்தார்கள். அத்தோடு உறவினர்களையும் நினைவு கூர்ந்து இருப்பார்கள்.

நவம்பர் 27ஆம் திகதி என்பது போரின்போது உயிரிழந்த சாதாரண மக்களுக்காகவோ அல்லது தமிழீழ இலட்சியத்திற்காக உயிர்த் தியாகம் செய்த ஏனையவர்களுக்காகவோ குறிக்கப்பட்ட நாள் அல்ல. அது பாதுகாப்புத் தரப்பினரோடு ஏற்பட்ட மோதலின்போது காயமடைந்து, அதனால் பின்னர் உயிரிழந்த முதலாவது புலி உறுப்பினர் சங்கரின் நினைவாக புலிகளால் மாவீரர் நாளாக பிரகடனப்படுத்தப்பட்ட நாளாகும்.

தமிழீழ இலட்சியத்திற்காக உயிர்த் தியாகம் செய்த முதலாவது நபர் உரும்பிராய் சிவகுமாரனாகும். ஆனால் சங்கர் உயிர் நீத்த நாளையே புலிகள் மாவீரர் நாளாக பிரகடனப் படுத்தினர். எனவே இது பிரதானமாக புலிகளை நினைவு கூரும் நாளாகும். எனவே மக்கள் நவம்பர் 27ஆம் திகதி போரின் போது உயிரிழந்த தமது உறவினர்களையே நினைவு கூர்ந்தார்களேயொழிய புலிகளை நினைவு கூரவில்லை என்று கூற முற்படுவது சரியானதல்ல. மாணவர்கள் மீதான பாதுகாப்புத் துறையினரின் தாக்குதல் நியாயமற்றது என்று கூறுவதற்காகவே சிலர் அவ்வாறு கூறுகிறார்கள். ஆனால், அதன் மூலம் புலி-களை நினைவு கூருவது பிழையென அவர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள் போலும்.

எவ்வாறாயினும் எவராவது புலிகளின் மாவீரர் நாளை அனுஷ்டிப்பதை பாதுகாப்புத் துறையினர் பொறுத்துக் கொண்டு இருப்பார்கள் என்று எதிர்ப்பார்ப்பதும் புத்திசாலித்தனமல்ல.

நாம் சரியென்றாலும் பிழையென்றாலும் அவர்களின் பதில் அடக்குமுறையாகத் தான் இருக்கும். ஏனெனில் அவர்கள் புலிகளுடன் போரிட்டு மூன்றரை ஆண்டுகள் மட்டுமே கடந்துள்ளன. அதேவேளை அவர்கள் வெலிக்கடைச் சிறையில் சிங்களக் கைதிகளையே எவ்வாறு நடத்தினார்கள் என்பதும் எல்லோரும் அறிந்த விடயமா-கும். எதனையும் பலத்தைப் பாவித்து அடக்கலாம் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருக்கிறது.

புலிகளை போர்க்களத்தில் தோல்வியுறச் செய்தாலும் சித்தாந்த ரீதியாக அவர்கள் மீண்டும் நாட்டுக்குள் பலம் பெற்று வருகிறார்கள் எனக் கூறி புதிய அடக்குமுறைச் சட்டங்களையும் அடக்குமுறை நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் இந்த நிலைமையை பாவிக்கலாம். கடந்த காலங்களிலும் அரசாங்கத்தின் பல தலைவர்கள் இந்த வாதத்தை முன்வைத்தார்கள். வடக்கில் இராணுவ நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காகவும் இந்த நிலையை அரசாங்கம் உபயோகிக்கலாம்.

# “மெர்சடிஸ்” பெயர் காரணம்



வியன்னாவில் வசித்து வந்த ஒஸ்ட்ரிய தொழிலதிபரான எமில் ஜெலிநெக், கார் தயாரிப்பில் மிகவும் ஈடுபாடு உடையவராக இருந்தார். 1889ஆம் ஆண்டில் பிறந்த இவரது மகளின் பெயர் மெர்சடிஸ். எதிர்காலத்தில் மக்களின் வாழ்க்கையில் கார் இன்றியமையாத வாகனமாக உருவாகும் என்று கருதிய இவர், 1889ஆம் ஆண்டில் நடைபெற்ற tour to nice கார் ரேஸில் கலந்து கொண்டபோது தன்னுடைய 23 எச்பி திறன் கொண்ட daimler benz காருக்கு மெர்சடிஸ் என்ற பெயரை வைத்ததோடு போட்டியில் முதல் பரிசும் பெற்றார்.

டெய்ம்லரை வடிவமைத்த வில்ஹெம் மேபெக் புதிய வடிவில் கார்களை உருவாக்கத் திட்டமிட்டார். அந்தப் புதிய கார்கள் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெறுமென்று கருதி ஜெலிநெக், 36 கார்களுக்கு ஓர்டர் கொடுத்ததோடு உலக நாடுகளில் விற்பனை செய்யும் உரிமையையும் பெற்றார். அந்த கார்களுக்கு “மெர்சடிஸ்” என்ற பெயரை வைத்து பிரபலப்படுத்தினார்.

# பேசும் வேலை!



- உலகத்திலேயே மிகவும் கடினமான வேலை பேசுகிற வேலைதானாம். நாம் பேசும்போது குரல் நாண்கள் விநாடிக்கு 150 முறை அசைகின்றன. ஆசிரியர்கள் தங்கள் பணி நேரத்தில் நான்கில் ஒரு பங்கு பேசியே ஆக வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பேசுவதையே தொழிலாகக் கொண்டவர்களின் எண்ணிக்கை உலக அளவில் 15 கோடியாகும்.

- நம்மால் கீழ்த்தாடையை மட்டுமே அசைக்க முடியும். மேல் தாடையை அசைக்க முடியாது. அதைப் போல விபத்து போன்றவற்றால் கீழ்த்தாடையே பெரிதும் பாதிக்கப்படுகிறது. தாடை எலும்புகள் மிக உறுதியானவை. இவற்றால் 279 கிலோவுக்கு மேற்பட்ட எடையுள்ள பொருள்களைக்கூட கடித்துத் தூக்க முடியும்.

- பேச்சாளர் ஒருத்தர் தன்னுடைய பேச்சைத் தொடங்குவதற்கு முன்பு கூட்டத்தைப் பார்த்துக் கேட்டார். “நான் எவ்வளவு நேரம் பேச வேண்டும்?” என்று. உடனே கூட்டத்தில் இருந்து எழுந்த ஒருவர், “நீங்க எவ்வளவு நேரம் வேணும் என்றாலும் பேசலாம்... ஆனால் நாங்கள் அஞ்சு நிமிஷத்துக்கு மேலே இங்கே உட்கார்ந்திருக்க மாட்டோம்!” என்றார்.

# புதன் கிரகத்தில் ஐஸ் கட்டிகள்



**- என்.ராமதுரை -**

புதன் கிரகத்தில் பனிக்கட்டிகள் வடிவில் தண்ணீர் உள்ளதாக இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதன் கிரகத்தைச் சுற்றிச் சுற்றி வருகின்ற மெசஞ்சர் விண்கலம் இதைக் கண்டுபிடித்துள்ளது. இது அடுப்புக்கு அருகே ஐஸ் கட்டிகள் உருகாமலேயே இருப்பதற்கு ஒப்பாகும்.

சூரிய மண்டலத்தில் புதன் கிரகம் (Mercury) தான் சூரியனுக்கு மிக அருகில் உள்ளது. புதனில் வெயில் பொசுக்கி எடுக்க இது ஒன்றே போதும். தவிர, அந்த கிரகத்தில் பகல் என்பது சுமார் மூன்று மாதம். இரவு என்பது சுமார் மூன்று மாதம்.

பகலாக உள்ள பகுதியில் வெயில் 427 டிகிரி செல்சியஸ். புதன் கிரகத்தின் வானில் 11 சூரியன் பிரகாசித்தால் எப்படி? அந்த அளவு வெயில். இரவாக உள்ள பகுதியில் குளிர் ஆளைக் கொன்று விடும். மைனஸ் 173 டிகிரி. புதன் கிரகத்தில் செடி, கொடி, மரம் என எதுவும் இல்லை. எந்த உயிரின-மும் இல்லை. புதன் பொசுங்கிப் போன கிரகம்.

ஆனால் புதன் கிரகத்தின் வட துருவப் பகுதியில் தண்ணீரானது பனிக்கட்டி வடிவில் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏதோ உறைந்த பனிக்கட்டி வடிவில் இருப்பதாக ராடர் மூலம் கண்டறியப்பட்டிருந்தது. என்றாலும் பனிக்கட்டி வடிவில் இருப்பது தண்ணீர் தானா என்பது நிச்சயமாகத் தெரிய வரவில்லை. ஏனெனில் வேறு வகை வாயுக்களும் உறைபனி வடிவில் இருக்க முடியும்.

பூமியில் வட, தென்துருவங்களில் உறைந்த பனிக்கட்டிப் பாளங்கள் உள்ளன. குளிர் காலத்தில் ரஷ்யா, சுவீடன் போன்ற குளிர்ப் பிரதேசங்களில் விழும் பனி உறைபனியாக மாறுவதுண்டு. அதாவது பூமியில் உறைபனிக் கட்டிகள் பூமியில் தோன்றுபவை.

மாறாக புதன் கிரகத்தில் வட துருவப் பகுதியில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள உறைபனிக்கட்டிகள் வெளியிலிருந்து “இறக்குமதி”ஆனவை. அதாவது வால் நட்சத்திரங்கள் கொண்டு வந்து சேர்த்தவை.

வால் நட்சத்திரங்களைப் பனிக்கட்டி உருண்டைகள் என்றும் கூறலாம். அந்த பனிக்கட்டிகள் நீர் உறைந்ததால் ஏற்பட்டவை. பல சமயங்களிலும் வால் நட்சத்திரங்கள் கிரகங்களில் வந்து விழுவது உண்டு. பூமியில் உள்ள நீரில் கணிசமான பகுதி பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வந்து விழுந்த வால் நட்சத்திரங்கள் மூலம் கிடைத்ததாக ஒரு கருத்து உண்டு.

புதன் கிரகத்தின் வட பகுதியில் உள்ள ஆழமான பள்ளங்களில் இப்போது காணப்படுகின்ற ஏராளமான பனிக்கட்டிகள் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விதம் வால் நட்சத்திரங்களால் வந்து விழுந்த பனிக்கட்டி உருண்டைகளே என்று கருதப்படுகிறது.

புதன் கிரகத்தில் வட துருவப் பனிக்கட்டிகள் உருகாததற்கு முக்கிய காரணம் உண்டு. பூமியானது தனது அச்சில் 23 டிகிரி சாய்ந்து உள்ளது. ஆகவே தான் வட துருவத்தில் ஆறு மாதம் பகலும் ஆறு மாத இரவும் ஏற்படுகின்றன. தென் துருவப் பகுதியிலும் இது போன்று ஆறு மாதப் பகல், ஆறு மாத இரவு உண்டு.

ஆனால் புதன் கிரகம் சாய்மானம் இன்றி தனது அச்சில் செங்குத்தாக அமைந்தபடி சுழல்கிறது. ஆகவே வட தென் துருவப் பகுதிகளில் என்றும் வெயிலே படாத சில பகுதிகள் உள்ளன. அங்கு தான் இந்த பனிக்கட்டிகள் காணப்படுகின்றன.

அமெரிக்க நாஸா 2004 ஆம் ஆண்டில் அனுப்பிய மெசஞ்சர் விண்கலம் 2008 ஆம் ஆண்டளவில் புதன் கிரகத்தை அடைந்து அப்போதிலிருந்து அக்கிரகத்தை ஆராயந்து வருகிறது.


# ஜென் கதைகள் வாசித்திருக்கிறீர்களா?

ஜென் கதை அளவில் மிக சிறியது. சில நேரம் அதில் கதை ஏதும் இல்லாத மாதிரி கூடத் தோன்றும். ஆனால் அந்தக் கதை உங்கள் மனதின் ஓரத்தில் எங்கோ தங்கி விட்டு, பிறகு உங்களுக்கு நடக்கும் ஏதோ ஒரு அனுபவத்தில் கதையின் அர்த்தம் சட்டென்று புரியும். மேலும், இக் கதைகள் அவரவர்க்கும் வெவ்வேறு அர்த்தங்களும் தரக்கூடும்!

சிறுவன் ஒருவன் சிறிய குருவி ஒன்றினைப் பிடித்து தனக்கு பின்புறம் கைக்குள் வைத்து மறைத்துக் கொண்டான். ஜென் குருவிடம் அவன், "குருவே, என்னுடைய கைக்குள் வைத்திருக்கும் பறவை உயிருடன் உள்ளதா அல்லது இறந்து விட்டதா?" என்று கேட்டான். குரு "இறந்து விட்டது" என்று கூறினால் தன்னுடைய கையில் இருக்கும் குருவியினை சுதந்திரமாக பறக்க விட்டு விடுவது, அப்படி இல்லாமல் குரு "உயிருடன் உள்ளது" என்று கூறினால் தன்னுடைய கைகளால் குருவியின் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவது என்று மனதிற்குள் முடிவெடுத்தான்.

ஜென் ஆசிரியர், "இந்தக் கேள்விக்குப் பதில் உன்னுடைய கைகளில்தான் உள்ளது" என்று சொல்லி விட்டுச் சென்று விட்டார்.

## இரண்டு கண்கள்



ஒரு ஜென் குருவைச் சந்திக்க இளைஞன் ஒருவன் வந்தான். வணக்கம் சொன்னான். "ஐயா, எனக்கு ஒரு சந்தேகம்" என்றான்.

"என்ன சந்தேகம்?"

"எனக்குப் பெரிய வாள் வீரனாகவேண்டும் என்று ஆசை" என்றான் அந்த இளைஞன். "அரசரின் கையால் பரிசும் பாராட்டும் வாங்கவேண்டும், அதன்பின் நான் அவருடைய படையில் சேரவேண்டும், பல போர்களில் ஜெயித்துச் சரித்திரத்தில் இடம் பிடிக்கவேண்டும் என்றெல்லாம் கனவு காண்கிறேன். தப்பா?"

"தப்பில்லை" என்றார் ஜென் குரு. "ஆனால், உனக்கு வாள்வீச்சு எந்த அளவு தெரியும்?"

"இப்போதுதான் கற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கிறேன்!"

"ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் தங்களுடைய இலக்கைக் கற்பனை செய்து சந்தோஷப்படுவது இயல்புதான்" என்றார் அந்த ஜென் குரு. "ஆனால் ஒரு விஷயம் புரிந்துகொள், உனக்கு உள்ளது இரண்டே கண்கள், அதில் ஒன்றை இலக்கின்மீது வைத்துவிட்டால், பாதையில் கவனம் பாதியாகிவிடும். அதற்குப் பதில் இரண்டு கண்களையும் இங்கே திருப்பினால், நீ விரும்பும் இலக்கைச் சீக்கிரம் சென்று அடையலாம், புரிகிறதா?"

## விடுபடும் வழி



ஒரு ஜென் துறவி. தியானத்தில் அமர்ந்திருந்தார். அவருடைய சிஷ்யர்களில் ஒருவன் குருவை அணுகினான். "ஒரு சந்தேகம்" என்றான்.

"என்ன சந்தேகம்?"

"தினமும் எழுகிறோம், தியானம் செய்கிறோம், சாப்பிடுகிறோம், தூங்குகிறோம், இந்தச் சங்கிலியில் இருந்து விடுபட வழியே கிடையாதா?"

"உண்டே!"


"என்ன வழி?"

"எழவேண்டும், தியானம் செய்யவேண்டும், சாப்பிடவேண்டும், தூங்கவேண்டும், அவ்வளவுதான்!"

"என்ன குருவே சொல்கிறீர்கள், ஒன்றும் புரியவில்லையே!"

"புரியாவிட்டால், தினமும் எழுந்திரு, தியானம் செய், சாப்பிடு, தூங்கு" என்று சொல்லிவிட்டு மீண்டும் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார் துறவி.

---



# ஏ.பி.நாகராஜன்

- R.P. ராஜநாயஹம் -

ஆரம்பகாலத்தில் நாடகத்தில் ஸ்திரிபார்ட் வேடங்கள் செய்தவர். டி.கே.எஸ், பிரதர்ஸ் "குமாஸ்தாவின் பெண்" நாடகமாக நடத்தப்பட்டபோது அதில் கதாநாயகியாக நடித்தவர் ஏ.பி.நாகராஜன்!

நால்வர்(1953), பெண்ணரசி(1955), நல்லதங்காள்(1955) ஆகிய படங்களில் கதாநாயகன் ஏ.பி.நாகராஜன்! இந்தப் படங்களுக்கு வசனமும் இவரே தான்.

"பொன்னே, புதுமலரே, பொங்கிவரும் காவிரியே மின்னும் தாரகையே வெள்ளி நிலவே.... அந்த நாள் மறைந்ததம்மா ஆனந்தம் போனதம்மா" இந்த டி.எம்.எஸ் பாடல் "நல்லதங்காள்" படத்தில் ஏ.பி.நாகராஜனுக்குத்தான்.

"நால்வர்" படத்தில் என்.என்.கண்ணப்பாவும் நடித்தார். விஜயகுமாரி கூட ஒரு சின்ன வேடத்தில் நால்வர் படத்தில் நடித்தார்.

அதே வருடம் கே.சோமு இயக்கி கண்ணப்பா கதாநாயகனாக நடித்த டவுன் பஸ் படத்திற்கு ஏ.பி.என். தான் வசனம். கே.சோமு இயக்கிய "சம்பூர்ண ராமாயணம்" படத்திற்கும் வசனம் இவரே.

திரையுலகில் பல மாற்றங்கள், மேடுபள்ளங்கள் கண்ட ஏ.பி.நாகராஜன் வாழ்வு பிறரிலிருந்து மிகவும் வேறுபட்டது. அரசியல் நோக்கு கொண்டிருந்தார். ம.பொ.சியின் தமிழரசுக்கழகத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். திரையுலகில் கவி.கா.மு.ஷெரிப் தமிழரசுக்கழகத்தில் மிகத்தீவிரமாக இயங்கியவர்.

நாடக ஸ்திரிபார்ட், திரைப்பட கதாநாயகன், வசனகர்த்தா, தயாரிப்பாளர் என்று பலவித அனுபவங்களுக்குப் பிறகு தான் மிகச்சிறந்த சாதனை இயக்குனர் ஆக பரிமளித்தார்.

வி.கே.ராமசாமியுடன் சேர்ந்து சிவாஜி, பானுமதி நடித்த "மக்களைப் பெற்ற மகராசி", எம்.ஆர்.ராதா நடித்த "நல்ல இடத்து சம்பந்தம்" போன்ற படங்களைத் தயாரித்தார். வி.கே.ஆர். நட்பு கசந்ததில் பின்னால் இவர் பெரிய இயக்குனரான போது ஏ.பி.என். படங்களில் வி.கே. ராமசாமி நடித்ததேயில்லை.

பொருளாதாரப் பிரச்சினை வாழ்நாள் முழுவதும் இருந்தது. கடும் நெருக்கடியின்போது எம்.ஆர்.ராதா உதவி செய்தபோது எம்.ஆர்.ராதாவை பக்கத்து அறைக்கு அழைத்து காலில் விழுந்து கும்பிட்டார். ராதா தன் இயல்புப்படி "எல்லார் முன் காலில் விழ வெட்கப்பட்டு ரகசியமாக பிறர் அறியாமல் நாகராஜன் என் காலில் விழுகிறான்" என்றார். ராதாவும் கூட இவர் பின்னால் இயக்கிய எந்தப் படத்திலுமே நடித்ததில்லை.

வடிவுக்கு வளைகாப்பு, குலமகள் ராதை படங்களை இயக்கிய பின் சிவாஜியின் 100ஆவது படம் "நவராத்திரி" இயக்கிய பெருமை. அதன் பின் வாழ்வில் ஒரு மாற்றம். திருவிளையாடல், சரஸ்வதி சபதம், கந்தன் கருணை, திருவருட்செல்வர், திருமால் பெருமை போன்ற படங்களை இயக்கினார். இதனால் இன்று வரை ஏ.பி.என். என்றால் புராணப்பட இயக்குனர் என்றே பரவலாக அறியப்படுகிறார்.

திருமால் பெருமை வந்த அதே வருடம் தான் ஏ.பி. நாகராஜனின் மாஸ்டர் பீஸ் "தில்லானா மோகனாம்பாள்" கூட வெளிவந்தது. நாகேஷ் நடித்த தருமி, வைத்தி கதாபாத்திரங்களை இயக்கி அவரை சிகரத்துக்கு கொண்டு சென்ற இயக்குனர். நவராத்திரி, திருவிளையாடல், தில்லானா மோகனாம்பாள் இவரை இன்று அமரத்துவம் பெறச்செய்து விட்டன.

சிவாஜி ஏனோ அவரை இயக்கிய இயக்குனர்களில் அவருக்குப் பிடித்தவராக



"தெய்வமகன்" "பாரத விலாஸ்" "பாபு" படங்களை இயக்கிய ஏ.சி.திருலோகசந்தரைத்தான் சொல்வார்.

திருவிளையாடலில் சிவாஜி, நாகேஷ் நடித்த அந்த பிரபல எபிசோடில் நக்கீரனாக ஏ.பி.என். பிரமாதமாக நடித்தார். ஆனால் அதன் பின் அவர் இயக்கிய படங்கள் எதிலும் நடித்ததில்லை.

மிக பிரமாண்ட படங்களாக எடுத்தபின் சின்ன பட்ஜெட் படங்களாக திருமலை தென்குமரி, கண்காட்சி எடுத்தார். பின் சின்ன பட்ஜெட் அகத்தியர், திருமலை தெய்வம் புராணப்படங்கள், மீண்டும் பிரமாண்டமாக தோல்விப்படம் "ராஜராஜசோழன்."

கமல் இவர் இயக்கத்தில் சிவகுமாருடன் குமாஸ்தாவின் மகள்(1974) - இந்தப் படம் 1941இல் டி.கே.எஸ் சகோதரர்கள் நடித்து வெளி வந்த குமாஸ்தாவின் பெண் ரீமேக். இந்த நாடகத்தில் தான் ஏ.பி.என் கதாநாயகியாக நடித்திருந்தார்! இவர் இயக்கிய போது அதில் கதாநாயகி ஆர்த்தி புட்டண்ணா.

கமல் நடித்த இன்னொரு ஏ.பி.என் படம் "மேல் நாட்டு மருமகள்". அதில் ஒரு நடனமாட பம்பாயிலிருந்து வந்த வாணி கணபதியை பின்னால் முதல் மனைவியாக்கியது.

ஏ.பி.என் கடைசியாக பெரிய பட்ஜெட்டில் பிரமாண்டமாக எம்.ஜி.ஆரை கதாநாயகனாக்கி அவருக்கு ஒன்பது நாயகியர் என்று "நவரத்தினம்" படத்தை இயக்கினார்.

நாகராஜனின் குரல் விஷேசமானது. அவர் படங்களில் "பேரன்பு மிக்க ரசிகப்பெருமக்களுக்கு என்று ஆரம்பித்து படத்தைப் பற்றி பேசுவார். கண்காட்சி படத்தில் கே.டி.சந்தானத்தின் சந்தப்பாடல் "அனங்கன் அன்பன் வசந்தன் மன்மதன் என்று வணங்கும் என்னுயிர் மன்னவா"விற்கு தொடக்கத்தில் தொகையறாவாக



பெண் வேடத்தில் ஏ.பி.என்

ஏ.பி.என் குரல்:

"வெண்ணிலவைக் குடை பிடித்து வீசு தென்றல் தேரேறி மென்குயில் தான் இசை முழங்க, மீன் வரைந்த கொடியசைய கண்கவரும் பேரழகி, கனகமணி பொற்பாவை...." என்று தொடரும்.

நடிகை வடிவுக்கரசியின் அப்பா ராணிப்பேட்டை சண்முகமும் ஏ.பி. நாகராஜனும் சகலைபாடிகள். வடிவுக்கரசியின் பெரியப்பா ஏ.பி.என்.

நடிகை குமாரி பத்மினி இவருடைய நிழலில் தான் வாழ்ந்தார். கண்காட்சி, திருமலை தென்குமரி போன்ற படங்களில் நடித்தவர். ஏ.பி.என் மறைந்து பல வருடங்களுக்குப் பின் இந்த நடிகை தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். ○




# யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்

## எமது பாடசாலை பற்றி...

இலங்கையின் மணிமுடியாம் யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் அயல் நிலை கிராமமாக அமைந்துள்ளது கொட்டடியாகும். கோட்டையடிப் பிரதேசத்தில் அமைந்தபடியால் "கோட்டையடி" எனும் சொல் காலப்பகுதியில் மருகி கொட்டடி என வந்தது எனவும், பண்டைக்காலத்தில் பண்ணைக் கடலை அண்டிய இப்பிரதேச மக்கள் தோணிகள், மரக்கலம் மூலம் பொருட்களைஏற்றி இறக்கினார்கள் எனவும், அவ் வேலைகளில் பெண் தொழிலாளர்களை ஈடுபடுத்தி கல், மண் போன்ற பொருள்களை "கொட்டடி... கொட்டடி" எனக் கூறியதால் இப்பெயர் அமைந்தது எனச் சிலரும் ஊகிக்கிறார்கள்.

1928இல் நமசிவாய செட்டியாரால் ஸ்தாபிக்கப்பட்டது. 1961இல் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது. பாடசாலையின் முதல் அதிபராக திரு.வீரகத்தி சட்டம்பியார் விளங்கினார். தற்போது வகை 11இனைச் சேர்ந்த பாடசாலையாக விளங்குகின்றது.

1991இல் அதிபராகக் கடமையேற்ற திரு. கு. சண்முகநாதன் அவர்களால் பாடசாலைக்கீதம் இயற்றப்பட்டதுடன், பாடசாலை இலட்சினையும் வடிவமைக்கப்பட்டு சாந்துணையுடன் என்ற வாசகம் பொறிக்கப்பட்டது. இவரது காலத்திலேயே பாடசாலைக் கொடியும் மாணவிகளின் கழுத்துப்பட்டி நீலம், வெள்ளை நிறம் கொண்டதாகவும் வடிவமைக் கப்பட்டது.

தொடர்ந்து மாணவரை விளையாட்டுத்துறையில் உள்ளீக்கும் நோக்குடன் அதிபர் ந.சிவராஜாவுடன் இணைந்து சத்தியம் (சிவப்பு), சிவம் (மஞ்சள்), சுந்தரம் (நீலம்)என மூன்று இல்லங்கள் தோற்றுவிக்கப்பட்டதுடன், அவை முறையே உண்மை, அழகு,பக்தி எனப்பொருள் பொதிந்த சொற்களாக அமைந்தமை சிறப்பிற்குரியது. அத்துடன் எமது பாடசாலைக்கு என ஒரு கலையரங்கு அமைக்கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.இக் காலப்பகுதியில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இதன் விளைவாக எமது மாணவர்கள் தமிழ்த்தினப்போட்டிகளிலும், கோட்டமட்ட விளையாட்டுப்போட்டிகளிலும் சிறப்பான சாதனைகளை நிலைநாட்டினர். இச் சாதனைக்கு ஊன்றுகோலாக இருந்த அதிபர், பிரதி அதிபர், சமகாலத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களின் பங்களிப்பு போற்றுதற்குரியது.


புதிய விஞ்ஞான ஆய்வு கூட திறப்பு விழாவின் போது...


மர நடுகை தினத்தில்...


கோட்ட மட்ட பண்ணிசைப்போட்டியில் முதலிடம் பெற்ற மாணவிகள்

## அதிபர் திரு.ப.கணேசன்



2010ஆம் ஆண்டு யூன் மாதம் 16ஆம் திகதி அதிபராக பதவியேற்று, கடமையாற்றி வருகின்றார்.

இவரின் சேவை நிமித்தம் 2010ஆம் ஆண்டு தமிழ்த்தினப்போட்டியை முன்னிட்டு நடைபெற்ற சிந்து நடைக்கூத்து காத்த வராயன் நாடகத்தில் இப்பாடசாலை வலயமட் டத்தில் முதல் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை நிலைநாயாட்டியது.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாணப்பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியில் இப்பாடசாலை மூன்று பதக்கங்களைப் பெற்று வரலாற்றுச்சாதனை படைத்தது.

செல்வன் ஜெ.அபிமன் 100 மீற்றர் ஓட்டத்தில் மூலம் 1ஆம் இடத்தைப்பெற்று தங்கப்பதக்கமும் 200 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளியும், செல்வன் சு. தமிழரசன் நீளம்பாய்தலில் 3ஆம் இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கமும் பெற்றனர்.

விளையாடுவதற்கு இப்பாடசாலையில் ஒரு சிறிய துண்டு நிலமும் விளையாட்டுப்போதனாசிரியரும் இல்லாத நிலையில் இப்பாடசாலை மாணவர்கள் வெள்ளிகளைக்குவித்துள்ளனர் என்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.


2012 ஆசிரியர் தினத்தின் போது...


2012 உடற்பயிற்சி கண்காட்சியின்போது...

# அமைச்சர் டக்ளஸின் முயற்சியால் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி

## மறவன்புலோ அபிவிருத்தி சங்கத்தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ பிரதேசத்தின் மீள்குடியேற்றத்தில் இருந்து சகல அடிப்படைத் தேவைகளையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் நிறைவேற்றித் தந்துள்ளார்கள் என மறவன்புலோ கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

மறவன்புலோ சின்னத்தம்பி முன்பள்ளி கலைவிழா நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேசம் மீளக்குடியமர்த்தப்படாமல் பின்தங்கிய நிலையில் காணப்பட்டபோது அதற்கு ஈ.பி.டி.பி கட்சியினர் பாரிய முயற்சிகளை எடுத்தனர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஊடாக எமது பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு எமது வாழ்வாதார தேவையான வீட்டுத்திட்டம், வீதிப்புனரமைப்பு, பொது மண்டப கட்டடங்கள், இலவச மின்சார இணைப்பு வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக என்பவற்றை வழங்கி எமது பிரதேசத்தை வளங்கள் நிறைந்த பிரதேசமாக மாற்றித்தந்துள்ளனர். இதற்காக அமைச்சருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கும் எமது பிரதேச மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய சாவகச்சேரி நகரசபை எதிர்க் கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் தென்மராட்சி அமைப்பாளருமான சூசைமுத்து அலெக்ஸாண்டர் (சாள்ஸ்) , இப்பிரதேசத்திற்கு தேவையான கட்டுமான வளர்ச்சிக்கும் பிரதேச அபிவிருத்திக்கும் நாம் என்றும் உறுதுணையாக இருப்போம். மாணவர்களின் அடிப்படைக் கற்றலாக முன்பள்ளி கற்றல் செயற்பாடு காணப்படுகிறது. முன்பள்ளி ஆசிரியர்கள் முன்வைத்த கோரிககைகள் அமைச்சரின் கவனத் திற்கு கொண்டு சென்று உரிய தீர்வு பெற்றுத்தரப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணை இணைப்பாளர் வலன்ரைன், முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் பாக்கியராஜா, மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய அதிபர் ஜெயகாந்தன், மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய முன்னைநாள் அதிபரும் சாவகச்சேரி பிரதேசசபை எதிரக கட்சித்தலைவருமான ஞானலிங்கம், சமுகசேவையாளர் க.மயில்வாகனம் ஆகியோரும் பழையமாணவர்கள் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

வட இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் த. இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (109)

# கைவிட்ட நிலையிலிருந்த முதியவர் இணைப்பு

(திருநெல்வேலி)

எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையில் முதியவர் ஒருவர் கைதடி முதியோர் இல்ல வெளிவாசலுக்கு முன்பாக வீதியோரத்தில் தனது தலையில் மண்ணை வாரி வாரி அள்ளிக் கொட்டியபடி அழுது கொண்டிருந்ததைக் கண்ட இல்ல உத்தியோகத்தர்கள், இவரை இல்லத்துக்குள் அழைத்துச் சென்றனர். இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

புத்தூரைச்சேர்ந்த ஆறுமுகம் பிறைசூடி என்னும் 80 வயதுடைய வயோதிபரே இவராவார். இவரை விசாரித்தபோது இவருக்கு மனைவியும், இரண்டு பிள்ளைகளும் இருப்பது தெரியவந்தது.

தனது சகோதரனுக்கு சொத்துக்கள் முழுவதையும் எழுதிக் கொடுத்துவிட்டதால் மனைவி, பிள்ளைகள் இவரைக் கைவிட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. கிராம சேவகர் மூலம் விசாரணை செய்தபோது தனக்கு இவரால் சொத்துக்கள் எதுவும் தரப்படவில்லை என இவரது சகோதரன் கூறியுள்ளார்.

இவர் மீது இரக்கம் கொண்ட இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன், வயோதிபரின் பகுதிக்கான கிராமசேவகர் மற்றும் சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு அவர்களது சிபார்சின் பேரில் தற்காலிகமாக கைதடி சாந்தி இல்லத்தில் இவரை இணைத்துக் கொண்டுள்ளனர். (137)

# அதிபரின் இடமாற்றத்திற்கு பெற்றோர்கள் எதிர்ப்பு

(வலிகாமம்)

தென்மராட்சிக் கல்விவலயத்திலுள்ள வரணி-கரம்பை அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ந. வசந்தகுமாரின் இடமாற்றத்திற்கு பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது; மேற்படி பாடசாலையின் அதிபருக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரால் இடமாற்றக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இடமாற்றம் தொடர்பில் அறிந்து கொண்ட பாடசாலைச் சமூகம் இந்த இடமாற்றத்தை ஆட்சேபித்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறது.

இந்தப் பாடசாலையில் திறமையாக சேவையாற்றி வந்த வசந்தகுமாரை இடமாற்றம் செய்துவிட்டு, அவரது இடத்திற்கு வரணி வடக்கு அமெரிக்க மிசன் த.க.பாடசாலை அதிபர் விமலேந்திரனை நியமித்திருக்கும் வலயக் கல்விப் பணிப்பாளரின் செயலையே பாடசாலைச் சமூகம் எதிர்த்து வருவதாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் நா. யோகநாதன் தெரிவித்துள்ளார்.

வரணி வடக்கு அ.மி.த.க. பாடசாலை அதிபர், தொடர்பில் பாடசாலைச் சமூகம் நல்லபிப்பிராயம் கொண்டிராமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. வரணி கரம்பை அ.மி.த.க.பாடசாலை பல வருடங்கள் இயங்காமல் இருந்தது எனவும், வசந்த குமார் அதிபராக வந்து இந்தப் பாடசாலையை நான்கு பிள்ளைகளுடன் ஆரம்பித்து தற்பொழுது 40 பிள்ளைகளைக் கொண்ட ஆரம்பப்பாடசாலையாகப் புதிய கட்டடத்துடன் அபிவிருத்தி செய்துள்ளார் எனவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இதன்காரணமாகவும் இந்த அதிபரை மாற்றம் செய்யவேண்டாம் என்ற எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளருக்கும், மாகாணக் கல்விப் பணிப்பாளருக் கும் அனுப்பியுள்ளதாகவும் இது தொடர்பில் நேரில் சென்று கலந்துரையாடியதாகவும் பாட சாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (06)

# பதிவிறக்கப் பெட்டகம்

கேக்கை இரண்டாக வெட்டியதில் ஒரு பாதி பெரியதாகவும், மற்றொரு பாதி சிறியதாகவும் அமைந்துவிட்டது. ஜோன் பெரிய பகுதியை எடுத்துக் கொண்டு, சிறிய பகுதியைத் தனது அக்காவுக்குக் கொடுத்தான்.

“நானாக இருந்தால் பெரியதை உனக்குக் கொடுத்துவிட்டு, சிறியதை நான் எடுத்துக் கொள்வேன்” என்றாள் அக்கா.

“இப்போது மட்டுமென்ன? அப்படித்தானே ஆகியிருக்கிறது. இதற்காக ஏன் வருத்தப்படுகிறாய்?” என்றான் ஜோன்.

*** *** *** ***

இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டனர்...
“ஏன், என்னவோ போல இருக்கிறாய்?’
“நான் விரைவில் தந்தையாகப் போகிறேன்...’
“அதில் வருத்தப்பட என்ன இருக்கிறது?’
“இன்னும் என் மனைவிக்குத் தெரியாது...’

*** *** *** ***

“நம்முடைய சிநேகிதன் நடராஜன் ஊரைவிட்டு ஓடுறதுக்கு நான் காரணமாயிட்டேன்டா...”
“அடப் பாவி... அப்படி என்னடா செய்தாய்?”
“நாற்பதாயிரம் ரூபா கடன் கேட்டான். கொடுத்தேன்”

*** *** *** ***

ஊரில் பெரிய பணக்காரர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஏகப்பட்ட சொத்துக்கள் இருந்தன. நிறைய வருமானம் வந்தது. ஆனால் அவருக்கு ஒரு பிரச்சினை. தூக்கம் வருவதில்லை.

ஒருநாள் பணக்காரர் தனது தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கச் சென்றார். அப்போது ஒரு மரத்தடியில் அவருடைய வேலைக்காரன் வெறும் தரையில் துண்டை விரித்து மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

பணக்காரருக்குப் பொறாமையாக இருந்தது. தூங்கிக் கொண்டிருந்தவனை ஒன்றும் சொல்லாமல் போய்விட்டார். மறுநாள் அவனை வீட்டுக்கு வரவழைத்தார்.

“எனக்கோ ஏகப்பட்ட சொத்துக்களிருக்கு. எந்தவிதத்திலும் குறைவில்லை. ஆனா படுத்தால் தூக்கம் வரமாட்டேன் என்கிறது. ஆனால் அடுத்த வேளைச் சாப்பாட்டுக்கு வழியில்லாத உனக்கு அடிச்சுப் போட்ட மாதிரி தூக்கம் வருது. அது எப்பிடி?” என்று கேட்டார்.

அதற்கு வேலைக்காரன், “ஐயா, உங்களை மாதிரி பணக்காரர்கள் எல்லாரும் நல்லாத் தூங்க ஒரே வழிதான் இருக்கு” என்று சொன்னான்.

“என்ன செய்யவேணும் என்று சொல்லு. எவ்வளவு செலவானாலும் செய்கிறேன்” என்றார் ஆர்வத்துடன்.

“உங்க சொத்து சுகங்களைத் தான தர்மம் செய்திட்டு, என்னை மாதிரி ஏழையாகி நல்லா உழையுங்கள். தூக்கம் தானாக வரும்” என்றான் வேலைக்காரன்.

*** *** *** ***

**ஆசிரியர்:** கூட்டலுக்கும் பெருக்கலுக்கும் ஒரு வித்தியாசமும் கிடையாது என்று சொல்றியே! அது எப்படி?
**மாணவன்:** ஒரு இடத்திலுள்ள குப்பையைப் பெருக்கினால் எவ்வளவு குப்பை சேருமோ, அதே அளவு குப்பைதான் அந்த இடத்தைக் கூட்டினாலும் சேரும் சேர்..!

*** *** *** ***

**ஆசிரியர்:** கோழியிலிருந்து முட்டை வருகிறதா? முட்டையிலிருந்து கோழி வருகிறதா?
**மாணவன்:** கோழியிலிருந்துதான் முட்டை வருகிறது சேர்!
**ஆசிரியர்:** எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?
**மாணவன்:** முட்டையிலிருந்து குஞ்சுதான் வரும் சேர்!

*** *** *** ***

“டேய்... வாழ்க்கையில ஒரு கதவு அடைச்சா இன்னொரு கதவு திறக்கும் என்பது எனக்கு நல்லாவே தெரியுது”

“உன் தத்துவத்தை கொஞ்சம் விளங்கிற மாதிரித்தான் சொல்லித் தொலையேன்”

“அதாவது மின்சார வெட்டு என்று புலம்புறம். அதே வேளை மின்சாரக் கட்டணம் குறைவா வருதே... அதுக்குச் சந்தோஷப படுறமா”

*** *** *** ***

பியூட்டி பார்லர் முன்பு இருந்த வாசகம்: “இங்கிருந்து வெளியே செல்லும் அழகிகளைப் பார்த்து விசிலடிக்க வேண்டாம். அவள் ஒருவேளை உன் பாட்டியாக இருக்கலாம்.

# இலாப நோக்குடன் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள்

## கவலை கொள்கின்றனர் பெற்றோர்

(மன்னார்)

மன்னாரில் தனியார் கல்வி நிலையங்கள் பலவற்றில் கட்டுப்பாடுகள் இல்லாத நிலை காணப்படுவதாகவும் இதனால் மாணவர்கள் பல்வேறு தீய செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். மன்னார் மாவட்டத்தில் பல தனியார் கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றன.

சில கல்வி நிலையங்களில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. கைத்தொலைபேசி பாவனை உட்பட பல்வேறு செயற்பாடுகளுக்கு அந்த கல்வி நிலய நிர்வாகம் தடை செய்துள்ளது. ஆனால் பல கல்வி நிலையங்களில் அவ்வாறான கட்டுப்பாடுகள் விதிப்பதில்லை என பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

கட்டுப்பாடுகள் பலவற்றை விதித்தால் மாணவர்கள் அந்த தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்ல மாட்டார்கள் என்ற அச்சத்தில் பல கல்வி நிலையங்கள் அந்தக் கட்டுப்பாடுகளை விதிப்பதில்லை. இதனால் கட்டுப்பாடுகள் விதிக்காத கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் பல்வேறு சமுதாய பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

கையடக்கத் தொலைபேசி பாவனை, ஆண் ,பெண் மாணவர்கள் தனிமையாக சந்திக்கின்றமை உள்ளிட்ட பல பிரச்சினைகள் இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்படிப் பட்ட கல்வி நிலையங்கள் தமது சுய இலாபத்திற்காக மாணவர்களை தீய பாதையில் அழைத்துச் செல்வதாகவும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது 3 ஆம் தவணை பரீட்சை முடிவடைந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் பல்வேறு வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளன எனவே பெற்றோர் தமது பிள்ளைகளை நம்பிக்கையுடன் அனுப்பி வைக்கின்ற தனியார் கல்வி நிலையங்கள் தமது வருமானத்தை மட்டும் பார்க்காது மாணவர்களின் ஒழுக்கத்திலும், நன்னடத்தையிலும் அக்கறை செலுத்துமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# வரிஅறிக்கை தரவில் மாற்றம்; இருவருக்கு கட்டாய விடுப்பு

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அறவிடப்படும் வரி அறிக்கைகளின் தரவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஜாவத்தை அலுவலகத்தின் மதிப்பீட்டு உத்தியோகத்தர் மற்றும் பிரதான அலுவலகத்தின் கணனிப் பிரிவின் உத்தியோகத்தர் ஆகியோரே கட்டாய விடுமுறையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

கணனிமயப்படுத்தப்பட்டுள்ள வரி அறவிடுதல் தொடர்பான தரவுகளில் மாற்றத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் இரண்டு உத்தியோகத்தர்களும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியன விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

# சிகரட் விற்பனை நிலையத்தில் 15இலட்சம் ரூபா கொள்ளை




(மன்னார்)

மன்னார் பஸார் பகுதியில் அமைந்துள்ள சிகரட் விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் துணிகர கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸார தளுவத்த தெரிவித்தார். வழமைபோல குறித்த சிகரட் விற்பனை நிலையம் காலை திறக்கப்பட்ட நிலையில் அங்கிருந்த பணியாளரான ஸ்ரீதரன் பார்த்திபன் (24 வயது) என்பவர் பணத்தை வங்கியில் வைப் பிலிடுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். இந்நிலையில் தலைக்கவசத்தினால் முகத்தை மறைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளொனறில் வந்த இருவர் விற்பனை நிலையத்திற்குள் நுழைந்து கைத்துப் பாக்கியால் மிரட்டி, ஸ்ரீதரன் மீது தாக்குதல் நடத்தி விட்டு சுமார் 15 இலட்சம் ரூபாய் பணத்தை கொளளை யடித்துச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்துள்ளனர். பின்னர் மன்னார் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உதய ஹேமந்தவின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் பொஸிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஸாரதளுவத்தவின் தலைமையிலான விசேட பொலிஸ குழுவினர் துரித தேடுதல் நடவடிக்கையும் மேலதிக விசாரணைகளும் நடத்தி வருகின்றனர்.

மன்னார் பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் பட்டப்பகலில் இடம்பெற்றுள்ள குறித்த துணிகரக் கொள்ளைச் சம்பவத்தினால் சக வர்த்தகர்கள் மற்றும் மக்களிடையே அச்சம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# கருக்கலைப்பு சட்டங்களை இலகுவாக்க கோரிக்கை

(கொழும்பு)

வல்லுறவு மற்றும் நெருங்கிய உறவினர்களுடனான உடலுறவு என்பவை காரணமாக கர்ப்பமாகிய பெண்களும், குறைபாடுள்ள கருவைச் சுமக்கும் பெண்களும் கருக்கலைப்பு செய்வதனை அனுமதிக்கும் வகையில் சட்டங்கள் இலகுவாக்கப்பட வேண்டுமென மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

சட்டங்களை இலகுவாக்குவதன் மூலமாக இவ்வாறான பெண்களின் துன்பங்களை குறைப்பதற்கு உதவமுடியும் என அவர்கள் கூறினர்.

சட்டத்திற்கு புறம்பான வகையில் நாட்டில் நாளொன்றுக்கு 700 வரையிலான கருக்கலைப்புகள் இடம்பெறுவதாகவும் இவை இரகசியமாக நடைபெறுவதால் இது உத்தியோக பூர்வ தகவல் அல்ல எனவும் நிபுணர்கள் கூறினர்.

கருக்கலைப்பு மற்றும் குடும்பக் கட்டுப்பாடு எனும் கருப்பொருளில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய மருத்துவ நிபுணர்களே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

வல்லுறவு, நெருங்கிய உறவினருடன் உடலுறவு என்பவை காரணமாக விருப்பமில்லாத கர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அவ்வாறு கருத்தரித்தல் ஒரு சதவீதமாகவே இருக்கின்றது. ஆயினும் இவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் மிகக் கடுமையானவையாகும்.

கருக்கலைப்பு தொடர்பாக 1883ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டமே தற்போதும் அமுலில் உள்ளது. இதன்படி ஒரு பெண்ணின் உயிருக்கு கருவினால் ஆபத்து இருக்குமாயின் மட்டுமே கருக்கலைப்புக்கு அனுமதிக்கப்படும்.

காலத்துக்கு ஒவ்வாத இந்தச் சட்டம் கைவிடப்பட்டு மேற்படி பிரச்சினைகள் உள்ள பெண்கள் கருக்கலைப்பு செய்வதற்கு அனுமதிக்கும் வகையில் சட்டங்கள் இலகுவாக்கப்பட வேண்டும் என மகப்பேற்று பெண் நோயியல் நிபுணர் வைத்தியர் மங்கள திஸநாயக்க தெரிவித்தார்.

# மன்னார் பொதுவிளையாட்டரங்கில் பண்டிகைக்கால வியாபாரம்

(மன்னார்)

எதிர்வரும் பண்டிகைக்காலங்களை முன்னிட்டு மன்னாரில் அமைக்கப்படவுள்ள தென்பகுதி வியாபாரிகளின் வியாபார நிலையங்கள் அனைத்தும் மன்னார் பொது விளையாட்டரங்கில் அமைக்கப்படவுள்ளதாக மன்னார் நகர சபையின் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் மன்னார் பஸார் பகுதியில் உள்ள பிரதான வீதியில் குறித்த பண்டிகைக்கால வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டமையினால் மன்னார் வர்த்தகர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதோடு போக்குவரத்துக்களும் பாதிப்படைந்து வந்தது.

இந்த நிலையில் இம்முறையும் குறித்த பிரச்சினைகள் இடம் பெறக்கூடாது என்ற தீர்மானத்திற்கு அமைவாக மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் அண்மையில் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது

இதன் போது சகல உறுப்பினர்களும் கலந்து கொண்டு குறித்த வர்த்தக நிலையங்களை இம்முறை பொது விளையாட்டு மைதானப் பகுதியில் அமைக்க தீர்மானத்தை முன்வைத்து ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த பண்டிகைக்கால வியாபார நிலையங்கள் அனைத்தும் இம்முறை மன்னார் பொது விளையாட்டு மைதான பகுதியில் அமைக்கப்படவுள்ளதாக மன்னார் நகர சபையின் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் மேலும் தெரிவித்தார்.



கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற எழுத்தாளர் தேவமுகுந்தன் அவர்களின் "கண்ணீரினூடு தெரியும் வீதி" நூல் வெளியீட்டில் நூலாசிரியர் நூலை வெளயிட்டு வைப்பதையும், எழுத்தாளர்களான அ.யேசுராசா, சி.விமலன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை ஆற்றுவதையும் காணலாம்.

20) பாடசாலை ஒன்றின் வாசிகசாலையானது பிரதான மண்டபத்திலிருந்து 50 m தெற்கேயும், வகுப்பறைக் கட்டடம் வாசிகசாலைக்கு மேற்கே 60 m தூரத்திலும், காரியாலயக் கட்டடம் பிரதான மண்டபத்திற்கு வடக்கே 60 m தூரத்திலும் அமைந்துள்ளன. இதற்கேற்ப, காரியாலயக் கட்டடம் அமைந்திருப்பது வாசிகசாலையிலிருந்து


1) 50 m வடக்கே 2) 170 m மேற்கே 3) 180m தெற்கே 4) 110 m வடக்கே

21) கொழும்பிலிருந்து 180 km தூரத்தில் இருக்கும் மாத்தறைக்குப் புறப்பட்ட பேருந்து 120 km தூரத்தினை 3 மணித்தியாலயத்தில் கடந்தது. அப் பேருந்து அதே கதியில் சென்றால் மாத்தறையை அடைய மேலும் எவ்வளவு நேரம் எடுக்கும்?

1) 1 மணித்தியாலம் 2) 1 மணி 30 நிமிடம் 3) 2 மணித்தியாலயம் 4) 3 மணித்தியாலம்

**பின்வரும் தகவலைக் கருத்திற் கொண்டு 20 ஆம் வினாவுக்கு விடை தருக.**

அநுராதபுரம், வவுனியா, பதுளை, மாத்தறை, அம்பாறை ஆகிய நகரங்களில் இன்று நள்ளிரவு 12.05 மணிக்கு புறப்பட்ட பேருந்து கொழும்பை அடைந்த நேரம் பின்வரும் மணிக்கூடுகளினால் காட்டப்பட்டுள்ளது.



வவுனியா அநுராதபும் பதுளை மாத்தறை அம்பாறை

22) மேற்கூறிய தகவலின்படி பேருந்துகள் கொழும்பை அடைந்த ஒழுங்குமுறையை சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) அனுராதபுரம் → பதுளை → அம்பாறை → மாத்தறை → வவுனியா
2) வவுனியா → மாத்தறை → அம்பாறை → பதுளை → அநுராதபுரம்
3) பதுளை → அநுராதபுரம் → வவுனியா → மாத்தறை → அம்பாறை
4) மாத்தறை → வவுனியா → அம்பாறை → அநுராதபுரம் → பதுளை

நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் 2, 3, 5 ஆம் தரங்களில் 2007 ஜனவரி மாதம் 1ஆம் திகதியிலிருந்து மாணவர் தொகை, புதிதாக வந்த மாணவர் தொகை, விலகிச் சென்ற மாணவர் தொகை, இப்போதைக்கு வகுப்பில் உள்ள மாணவர் தொகை எனும் விபரங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. அதன்படி அட்டவணையின் இடைவெளிகளில் வரவேண்டிய தொகைகளைக் கணித்து எழுதுக.
(உங்களுக்கு இலகுபடுத்துவதற்காக முதலாம் நிரை பூரணப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது)

| | தரம் | இருந்த மாணவர் தொகை | புதிதாக வந்த மாணவர் தொகை | விலகிச் சென்ற மாண்வர் தொகை | தற்போது வகுப்பிலுள்ள மாணவர் தொகை |
|---|---|---|---|---|---|
| உ+ம் | 2 | 45 | 08 | 03 | 50 |
| 23. | 3 | .................. | 06 | 09 | 42 |
| 24. | 4 | 43 | ................ | 08 | 47 |
| 25. | 5 | 47 | 04 | 08 | ............. |

26 3, 4 ஆம் தரங்களில் தற்போதுள்ள மொத்த மாணவர் தொகை யாது?

..........................................................................................

27. 3, 4, 5 ஆம் தரங்களில் இருந்து விலகிச் சென்ற மொத்த மாணவர் தொகை யாது?

..........................................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு

வெளியீடு 17



S.T.திலக்


**பின்வரும் பாடலை வாசித்து 1 ஆம், 2 ஆம் வினாக்களுக்கு விடை தருக**

ஒற்றுமையாக விரல்கள் இருப்பதனால்
உந்தன் கைக்கு மிகுந்த பலம்
ஒற்றுமையாக மக்கள் வாழ்வது
ஒவ்வொரு நாட்டிலும் நிறைந்த வளம்
தேடித் தேடிப் படிப்பவரால்
தெளிந்த அறிவை அடைந்திடலாம்
ஓடி ஓடி உழைப்பவரால்
உயர்ந்த இலக்கை எய்திடலாம்.

1) ஒற்றுமைக்கு உவமானமாகக் காட்டப்படுவது,
1) செல்வம் 2) கைவிரல்கள் 3) காகம்

2) உயர்ச்சிக்கு சிறந்த வழி
1) உழைப்பும் - சிக்கனமும் 2) கைவிரலும் - உழைப்பும் 3) ஒற்றுமையும் - உழைப்பும்

**ஒரு குறித்த நகரில் மருத்துவமனை, வாசிகசாலை, பாடசாலை, மைதானம் என்பன அமைந்துள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இதை அவதானித்து 3 ஆம் வினாவுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.**




இங்கு A= மருத்துவமனை B = பாடசாலை
C = வாசிகசாலை D = மைதானம்

3) பாடசாலையிலிருந்து ஏனைய மூன்று இடங்களுக்கும் செல்வதற்குக் குறைந்த தூரமாக அமையும் சரியான வழியைத் தெரிவு செய்து கோடிடுக.

1) A→ C →D 3) C → D→ A 3) C→A→D 4) A → D →C

**கீழே சில சம்பவங்கள் தரப்பட்டுள்ளன**

4) A - அசுத்தமான உணவை உண்பதால் கிருமிகள் உடம்பில் தொற்றுகின்றன.
B - ஈக்களின் கால்களில் இருக்கும் அசுத்தங்கள் உணவுடன் சேருகின்றன.
C - சிலர் வீட்டுக்கருகாமையிலே குப்பை கூளங்களைக் குவித்து வைக்கின்றனர்.
D - ஈக்கள் உணவில் அமருகின்றன.
E - உடலினுள் கிருமிகள் செல்வதனால் வயிற்றுவலி ஏற்படுகின்றது.
F - குப்பை கூளங்களினால் ஈக்கள் பெருக்கமடைகின்றன.
மேலே தரப்பட்டுள்ள சம்பவங்களின் சரியான ஒழுங்கு முறையினைக் காட்டும் விடை யாது?
1) CEADFB 2) CFDBAE 3) ABCDEF 4) CFDEAB

**பின்வரும் வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

5) நீங்கள் வாழும் பிரதேசத்தில் நுளம்புத் தொல்லை கூடுதலாக உள்ளது. அதனைத் தவிர்ப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டியது யாது?
1) தூங்கும்போது நுளம்பு வலையைப் பாவித்தல்
2) தூங்கும்போது நுளம்புச் சுருள் ஒன்றை எரிய வைத்தல்.
3) நுளம்புகள் பெருகும் இடங்களை இல்லாமற் செய்தல்.

6) ஒரு மாணவன் சந்தோசப்படத்தக்க ஒரு சந்தர்ப்பம் எதுவாக இருக்கும்?
   1) பரீட்சையில் எதிர்பார்த்த 100 புள்ளிகளைப் பெறல்
   2) ஓட்டப் போட்டியில் நான்காம் இடத்தைப் பெறல்.
   3) உயரம் பாய்தலின்போது கை ஒன்று உடைதல்.
   4) பேச்சுப் போட்டி ஒன்றின்போது நான்காம் இடத்தைப் பெறல்.


7) ஒரு வாங்கில் பெண் பிள்ளைகள் வரிசையாக அமர்ந்திருந்தனர். ஒரு பக்கத்தில் இருந்து கணக்கிடும்போது ரூபி 13 ஆவதாக அமர்ந்திருந்தாள். மறுபக்கத்தில் இருந்து கணக்கிடும்போது அவள் 6 ஆவதாக அமர்ந்திருந்தாள். வாங்கில் எத்தனை பெண் பிள்ளைகள் அமர்ந்திருந்தனர்?
   1) 18   2) 19   3) 21   4) 22

**கீழே தரப்படும் தகவலை வாசித்து நன்கு விளங்கி சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

8) ஒளியானது ஒலியிலும் மிக விரைவாகச் செல்லும்
   1) மின்னல் தெரிந்த பின்னரே இடிமுழக்கம் ஓசைகேட்டல், ஆனால் இவையிரண்டும் ஒரே நேரத்திலேயே நடைபெறுகின்றன.
   2) ஓட்டப்போட்டியின்போது வெடிசுட்ட புகை தெரிந்த பின்னரே சத்தம் கேட்கிறது.
   3) மேற்கூறிய யாவும் சரியானவை.


**உருக்களுக்கிடையேயுள்ள தொடர்பை அவதானித்து ஏனைய உருவில் வரவேண்டிய இடைவெளிக்குரிய விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

9)




   1) 15   2) 20   3) 30   4) 40

10) உணவு, சிற்றுண்டி, லட்டு என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டுவதற்கு பின்வரும் உரு காட்டப்பட்டுள்ளது. இதில் B யினால் காட்டப்படுவது.
   1) உணவு   2) சிற்றுண்டி   3) லட்டு




**கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்து கோடிடுக.**

11) கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை என்று ஏமாறக்கூடாது
   1) இக்கரைமாட்டிற்கு அக்கரைப் பச்சை
   2) மின்னுவதெல்லாம் பொன்னல்ல
   3) கழுதை அறியுமா கற்பூர வாசனை

12) கிடைப்பதற்கு அரிதான ஒன்றை மறப்பது நல்லது
   1) பேராசை பெருந்தரித்திரம்
   2) கிட்டாதாயின் வெட்டென மற
   3) சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது




பின்வருவனவற்றை உரிய முறையில் தொடர்புபடுத்தினால் வரும் விடையின் கீழ் கோடிடுக.

13) 1) நெத்தலி, திருக்கை, சுறா, கணவாய் ( 6 )   ① தானியங்கள்
   2) கத்தரி, வெண்டி, பாகல், புடோல் (..........)   ② பெருந்தோட்டப் பயிர்கள்
   3) மரவள்ளி, வத்தாளை, இராசவள்ளி (..........)   ③ மரக்கறி வகைகள்
   4) குரக்கன், சாமி, திணை, வரகு (..........)   ④ கிழங்கு வகைப் பயிர்கள்
   5) எள், தேங்காய், சூரியகாந்தி, கறுவா (..........)   ⑤ எண்ணெய் பெறப்படுவன
   6) தேயிலை, இறப்பர், தென்னை (..........)   ⑥ கடல் உணவுகள்

   1) 34152   2) 31542   3) 51432   4) 12345


பின்வரும் வினாவில் கூட்டுக்குள் குறியீடுகளும், அதன் பெறுமதிகளும் தரப்பட்டுள்ளன. அதனை விளங்கி வெற்றிடத்திற்குப் பொருத்தமான பெறுமதியைத் தெரிவு செய்து கோடிடுக.

14)




   1) 95   2) 90   3) 100   4) 125

15) சில தகவல்களும், தகவல்களுக்கு ஏற்ப சிட்டை ஒன்றின் பெறுமதியும் அருகே தரப்பட்டுள்ளன. தகவலை விளங்கி 16 ஆம் வினாவுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.



| | |
|---|---|
| 2 அன்னாசி | 180.00 |
| 2 அப்பிள் | .................... |
| 6 பப்பாசிப்பழம் | .................... |
| 5 தோடம்பழம் | .................... |
| ரூபா. | 380.00 |

   1) அன்னாசி ஒன்றின் விலையைத் தெரிந்து கோடிடுக.
   1) ரூபா 80.00   2) ரூபா 100.00   3) ரூபா 90.00   4) ரூபா 60.00

   2) பின்வரும் சிட்டையின் பெறுமதியினைக் காண்க.

| அன்னாசி + 2 அப்பிள் + 3 பப்பாசிப்பழம் + 5 தோடம்பழம் |
|---|

   1) 1) ரூபா 200.00   2) ரூபா 245.00   3) ரூபா 250.00   4) ரூபா 320.00

16) உருவை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்து கோடிடுக.

17) நிறை : கிலோகிராம் எனின், தூரம் :..........................................
   1) மெற்றிக்தொன்   2) கிலோமீற்றர்   3) தொன்

18) திசையறி கருவி : விமானி எனின், வியாபாரி :..........................................
   1) கதிமதனி   2) அளவுச்சாடி   3) தராசு

19) கனவுரு : தீப்பெட்டி எனின், தாயக்கட்டை :..........................................
   1) சதுரம்   2) கூம்பகம்   3) சதுரமுகி

# பூகம்பத்தின் தாக்குதலுக்கு இலக்காகிய இமயமலை



சில நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை 8 முதல் 9 ரிக்டர் அலகுள்ள நில நடுக்கங்கள் இமயமலையில் ஏற்பட்டிருப்பதை புவியியல் வல்லுனர்கள் கண்டறிந்துள்ளனர். திபெத் பீடபூமியையும், இந்தியத் துணைக்கண்டத்தையும் பிரிக்கும் இமயமலை, பெரும் நிலநடுக்கங்களைச் சந்தித்திருக்கிறது என்று, இமயமலை பற்றி ஆய்வு செய்து வரும் ஸ்டான்போர்ட் புவிஇயற்பியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய புவித்திட்டுகளும், ஆசியக் கண்டத் திட்டும் மோதிக் கொண்டதால் இமயமலை உருவாகியுள்ளது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்திய புவிஇயற்பியல் ஆய்வு தேசிய மையத்தின் தரவுகளின் அடிப்படையில் இரண்டு ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்ட ஸ்டான்போர்ட் ஆய்வக ஆய்வாளர் வாரன் கால்டுவெல் சில ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளார்.


தரவுகளின் அடிப்படையில், இமயமலை வடக்கு நோக்கி 2 முதல் 4 டிகிரி கோணங்கள் உந்தப்படுவதாகத் தெரிவித்துள்ளார். சில நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை 8 முதல் 9 ரிக்டர் அலகுள்ள நில நடுக்கங்கள் இமயமலையில் ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. நிலநடுக்கங்களின் காரணமாக ஏற்பட்ட படிவுகள் மற்றும் இமயமலையைச் சுற்றியுள்ள நீரை ஆய்வு செய்ததில், நிலநடுக்கத்தின் போது, புவி மேற்பரப்பில் தெற்கு நோக்கிய பெரும் பிளவு ஏற்பட்டிருக்க வேண்டும் எனக் கருதுகிறோம் என்றார் கால்டுவெல். இப்பிராந்தியத்தில் பேரிடர் மேலாண்மை மற்றும் அபாய அளவீடுகள் தொடர்பானவற்றுக்கு இந்த ஆய்வு முடிவுகள் உறுதுணையாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை காதலியை மணக்க பதவி விலகும் இராணுவ அதிகாரி

இலங்கைக் காதலியை மணக்க விரும்பிய இந்திய இராணுவ மேஜரின் இராஜினாமாவை ஏற்றுக்கொள்ள அந்நாட்டு இராணுவம் தீர்மானித்துள்ளது. விகாஸ்குமார் என்ற 35 வயதான இராணுவ மேஜரே இவ்வாறு பதவி விலக விரும்பி இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்திருந்தார்.

இராணுவத்தில் கடமையாற்றுவோர் வெளிநாட்டு பெண்களையோ ஆண்களையோ தங்களது வாழ்க்கைத் துணையாக்கிக்கொள்ள முடியாது என்பது சட்டமாகும். அதன் அடிப்படையில் மேஜர் விகாஸ், தனது இலங்கைக் காதலியைத் திருமணம் முடிப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டது. இதனைத் அடுத்து தனது பதவியை இராஜினாமாச் செய்ய மேஜர் விகாஸ் தீர்மானித்தார்.

எனினும், பயிற்சிகளுக்காக செலவிட்ட மொத்தப் பணத்தையும் இந்திய இராணுவத்திற்கு மீளச் செலுத்த வேண்டுமென மேஜருக்கு இராணுவம் உத்தரவிட்டுள்ளது. இந்த நிபந்தனையை ஏற்றுக்கொள்வதாக மேஜர் விகாஸ் தெரிவித்துள்ளார்.




தமிழகத்தில் நிலவும் மின்வெட்டைக்கண்டித்து, பொள்ளாச்சிக்கு அடுத்த மாக்கினாம் பட்டியில் ம.தி.மு.க.வினரால் வைக்கப்பட்டுள்ள கண்ணீர் அஞ்சலி பதாகையைக் காணலாம்.

# உடல் உறுப்புகளை தானம் செய்த பிரியங்கா, பிருந்தா காரத்

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா காந்தி வாத்ரா மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிருந்தா காரத் ஆகியோர் தங்கள் உடல் உறுப்புகளைத் தானம் செய்துள்ளனர்.

டில்லியில் உள்ள சிறி கங்கா ராம் மருத்துவமனை உடல் உறுப்பு தான முகாமை நேற்று முன்தினம் நடத்தியது. சுமார் 500 பேர் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிருந்தா காரத் தனது உடல் உறுப்புகளைத் தானம் செய்வதாக உறுதிமொழி எடுத்தார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மகள் பிரியங்கா காந்தி வேறு ஒரு அவசர வேலை இருந்ததால் நிகழ்ச்சிக்கு வரவில்லை. ஆனால் அவர் எழுத்து மூலம் அனுப்பிய தகவலை மருத்துவமனை அதிகாரிகள் வாசித்தனர். அதில், அவர் தனது உடல் உறுப்புகளைத் தானம் செய்வதாக உறுதியளித்துள்ளார்.



இந்தியாவில் கோடிக் கணக்கில் மக்கள் இருந்தும் பெரும்பாலானோர் உடல் உறுப்புகளைத் தானம் செய்ய முன் வருவதில்லை என்று மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர். மூளைச் சாவு அடைபவர்களில் சிலரின் உடல் உறுப்புகள் தானமாக கொடுக்கப்பட்டாலே இந்தியாவில் உறுப்பு மாற்றும் அறுவைச் சிகிச்சைக்கு பேருதவியாக இருக்கும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# வைகோவுடன் இணையும் "வைகைப்புயல்" வடிவேல்!



கடந்த சட்டசபைத் தேர்தலில், தி.மு.க.வுக்கு பிரசாரம் செய்ததால் பட வாய்ப்புகளை இழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள நடிகர் வடிவேல், வைகோ முன்னிலையில் ம.தி.மு.க.வில் இணைவார் என்று எதிர்பார்க் கப்படுகிறது. தமிழ் திரைப்பட உலகில் தனக்கென்று ஒருபாணியை வகுத்துக் கொண்டு, இரசிகர்கள் மத்தியில் காமெடி நடிகராக வலம் வந்தவர் வடிவேலு.

கடந்த 2011இல் நடந்த சட்டசபைத் தேர்தலில், அப்போதைய ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தார். அதிலும், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்தைப் பற்றி கடுமையாக விமர்சித்துப் பேசியதால், அவருடைய பேச்சுக்கும், பிரசாரத்துக்கும் மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பு இருந்தது. அந்த தேர்தலில் தி.மு.க. தோல்வியைத் தழுவியது. அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சிப்பொறுப்புக்கு வந்தது.

தி.மு.க.வுக்கு அதரவாக பிரசாரம் செய்த ஒரே காரணத்தால் பட வாய்ப்புகள் அறவேயின்றி, சினிமாத் துறையிலிருந்து ஓரங்கட்டப்பட்ட நிலைக்கு வடிவேலு தள்ளப்பட்டார். இதற்கிடையே, எதிர் எதிர் துருவமாக இருந்த தி.மு.க. - தே.மு.தி.க. ஒரே அணியில் வர வாய்ப்புள்ளதாக வெளியான தகவல் வடிவேலுவை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

இந்நிலையில், திடீர் திருப்பமாக நடிகர் வடிவேலு இன்று ம.தி.மு.க., பொதுச்செயலாளர் வைகோ முன்னிலையில், அக்கட்சியில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்று திருச்சியில், "நாடாளுமன்றத்தில் வைகோ" என்ற நூல் வெளியீட்டு விழா நடக்கிறது. இதில் ம.தி.மு.க.வுக்கோ, வைகோவுக்கோ எவ்வித சம்பந்தமும் இல்லாத நடிகர் வடிவேலு பங்கேற்கிறார் என்று அழைப்பிதழில் பெயர் போடப்பட்டுள்ளது. ஆகையால் அவர் ம.தி.மு.க.வில் இணைவார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# ஆறு ஆண்டில் 700 விஞ்ஞானிகள் பதவிகளிலிருந்து விலகினர்

(புதுடில்லி)

கடந்த ஆறு ஆண்டுகளில் சுமார் 700 விஞ்ஞானிகள் தங்களது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர் என பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி தெரிவித்துள்ளார். ராஜ்யசபாவில் இது குறித்த கேள்விக்கு எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் அவர் கூறியிருப்பதாவது:

பாதுகாப்புத்துறையுடன் இணைந்து செயற்படும் டி.ஆர்.டி.ஓ. என்றழைக்கப்டும் மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித்துறை என்ற அமைப்பில் கடந்த 2007முதல் 2011ஆம் ஆண்டு வரையில் சுமார் 637 விஞ்ஞானிகளும், இந்தாண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி வரையில் சுமார் 50 விஞ்ஞானிகளும் தங்களது பதவியை இராஜினாமா செய்துள்ளனர். இவர்கள் அனைவரும் மற்ற நிறுவனங்களில் கிடைக்கும் அதிக வருவாய் மற்றும் சலுகைகளை எதிர்பார்த்து சென்றதாக அவர் தெரிவித்தார்


## வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ப. பியானுயா (பியானு)

முகவரி: கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

அகவை 2 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் .............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் – 2013

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2013ஆம் ஆண்டிற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ்வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து ஒவ்வொரு இலக்கத்துக்குமான வழங்கல்கள் / சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ரூபா 500/-ஐ எமது அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து தபாலுறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல்கள் / சேவைகள் பதிவுசெய்தல் – 2013"** எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 15.12.2012ஆம் திகதி 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அலுவலகத்தில் கையளிக்கலாம். காசோலை அல்லது காசுக்கட்டளை ஆயின் "பணிப்பாளர் போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்" என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

தொகுதிகள்:

| | | |
|---|---|---|
| தொகுதி "A" | - | பொருட்கள் வழங்குதல் (பொது) |
| தொகுதி "B" | - | பொருட்கள் வழங்குதல் (மருத்துவம்) |
| தொகுதி "C" | - | சேவைகள் / வேலை |
| தொகுதி "D" | - | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |

| தொகுதி இல. | பொருட்கள் விபரம் (பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள், எழுது பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு) |
| A - 03 | கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், றோனியோ இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள். |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறைப் பொருத்திகள், மாபிள்கல் வகைகள், நீர்க்குழாய்ப் பைப்புகள், பைப் இணைப்புக்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | சகலவிதமான அலுமினிய வீட்டுப்பாவனைப் பொருட்கள் |
| A - 07 | தும்பு மெத்தை, இறப்பர் மெத்தை, மெக்கின்ரோஸ், எலாஸ்டிக், நைலோன் நூல் |
| A - 08 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் பொருட்கள், மணல், கல், தீராந்தி, சலாகை உட்பட |
| A - 09 | மின்சாரப் பொருட்கள், அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டார்கள், மின்சாரபல்புக்கள், மின்விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும் |
| A - 10 | புற்பாய், தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A - 11 | ஊத்தைச்சோடா, அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், ஹார்பிக், சேவிங் பிளேட் மற்றும் ஏனையவை |
| A - 12 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் டயர், டியு,ப் மற்றும் பற்றறிகள் |
| A - 13 | தோல் உற்பத்திப் பொருட்கள் - சப்பாத்துக்கள், சிலிப்பர்கள் |
| A - 14 | குளிர்சாதனப்பெட்டிகள், காற்றுக் குளிராக்கிகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களும் |
| A - 15 | சகல வகையான ரெக்சீன் துணிகள், பொலித்தீன் |
| A - 16 | இறப்பர் முத்திரை வகைகள் |
| A - 17 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்து பானங்கள் |

| தொகுதி இல. | பொருட்கள் விபரம் (மருத்துவம்) |
|---|---|
| B - 01 | Surgical Instruments |
| B - 02 | Laboratory consumables |
| B - 03 | Laboratory equipment |
| B - 04 | Surgical / medical / equipments. |

| தொகுதி இல. | சேவைகள் விபரம் |
|---|---|
| C - 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல். |
| C - 02 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல் (காற்றுக் குளிராக்கி, குளிர்சாதனப்பெட்டி, றொனியோ இயந்திரம், கணனியும் அதனோடிணைந்த உபகரணங்களும், ஏனையவையும்) |
| C - 03 | மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் (Rewinding) |
| C - 04 | பதிப்பக வேலை (Printing) - சகலவித படிவங்கள், ஏனையவை. |
| C - 05 | வைத்தியசாலை அலுவலர்களுக்கு பிளாஸ்டிக் அடையாள அட்டை வழங்குதல். |
| C - 06 | கட்டடத் திருத்த வேலை, உள்ளகத் தொலைபேசி பராமரித்தல். |
| C - 07 | வைத்தியசாலைச் சுத்திகரிப்புச் சேவை, துணி சலவைச் சேவை, பாதுகாப்புச் சேவை. |

| தொகுதி இல. | வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D - 01 | சகலவிதமான வாகனத்திருத்தம், மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பனவற்றுக்கு குசன் வேலை |
| D - 02 | சகலவிதமான வாகனமும் சுத்திகரிப்பும் (Service) |

நிபந்தனைகள்:

01.வழங்கல்கள்/சேவைகள் 2013ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02.திருப்திகரமற்ற வழங்கல்கள்/ சேவைகளை நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
03.பணிப்பாளர் வெளி மூலங்களிலிருந்தும் கேள்வி கோரும் உரிமையைக் கொண்டுள்ளார்.
04.பதிவுக்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
05.மேலதிக விபரங்கள் பெற விரும்பின் பணிப்பாளர், போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 021 222 3149 உடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி.எஸ்.சிறீபவானந்தராஜா,**
**பணிப்பாளர்,**
**போதனாவைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

→

# பிலிப்பைன்ஸை உலுக்கிய "போப்பா" 300இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு



(நியூபேட்டன்)

பிலிப்பைன்ஸ் நாட்டைத் தாக்கிய "போப்பா" சூறாவளிக்கு சுமார் 300இற்கும் அதிகமானோர் பலியாகி உள்ளதுடன் சுமார் 2 இலட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் தென்சீனக் கடலை நோக்கி "போப்பா" என்ற சூறாவளி கடந்த செவ்வாய்க்கிழமை வீசியது. மணிக்கு 210 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய இந்த சூறாவளியால் நியூபேட்டன் மலைப் பகுதியில் மின்டனா தீவில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டது. மின்சாரம், தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டது. கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டது. கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

இந்தச்சூறாவளியில் சிக்கி 300இற்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும் பல நூறு பேரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 400இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

சுமார் 2 இலட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறதாக அந்த நாட்டு அரசு தெரிவித்திருக்கிறது.

# மாத நடுப்பகுதியில் வானியலில் மாற்றம்

டிசம்பர் 13-14 ஆம் திகதிகளில் வானியலில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்று நிகழவிருப்பதாக அறியப்பட்டுள்ளது, rock comet. எனும் வால் நட்சத்திரங்களின் துகள்கள் வந்து விழக் கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன, இவை 5.10 km விட்டத்தைக் கொண்டிருப்பதுடன், 1983ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி கண்டறியப்பட்டன. இவற்றை விண்வெளிக் குப்பைகள் என்றும் சொல்வார்கள். 2009ஆம் ஆண்டு நாசாவின் விண்கலமான STEREO-A இந்துபோன்ற 3200 இற்கும் மேற்பட்ட துகள்களை அவதானித்திருந்தது. மிகவும் பிரகாசமாக வந்து விழும் இத்துகள்கள் காற்று மண்டலத்திற்குள் நுழையும் போது உராய்வு காரணமாக எரிந்து பெருமளவு சாம்பலாகி விடும். மிகச் சிறியளவு துணிக்கைகளே பூமியை வந்தடையும். இதன் மூலம் பரந்தளவிலான பாதிப்பு ஏற்படாதெனவும் நாசா குறிப்பிட்டுள்ளது.

மாதிரி விண்ணப்பப் படிவம்

| FOR OFFICE USE | |
|---|---|
| Cash Receipt No. | |
| Date | |
| Amount. | |

**வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் – 2013**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

1. நிறுவனத்தின் பெயர் :
2. நிறுவனத்தின் முகவரி :
3. தொலைபேசி இலக்கம் :
4. தொலைநகல் இலக்கம் :
5. மின்னஞ்சல் முகவரி :
6. வியாபாரப் பதிவு இலக்கம்:
7. வியாபாரத்தின் தன்மை :
8. வற் பதிவு இலக்கம் :

| தொகுதி இலக்கம் | வழங்கல் / சேவை விபரம் |
|---|---|
| | |

என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகள் வழங்குவதற்கு உறுதியளிக்கின்றேன் / உறுதியளிக்கின்றோம். ரூபா 500/-க்குரிய பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதி இத்துடன் இணைத்துள்ளேன்/ இணைத்துள்ளோம்.

..............................
விண்ணப்பதாரியின் ஒப்பம்

விண்ணப்பதாரியின்பெயர்:..............................

திகதி ..............................

(C/2206)

# கடற்படை முகாம் மீது தாக்குதல் சந்தேக நபருக்கு நேற்று விடுதலை

(திருநெல்வேலி)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

தொல்புரம் கிழக்கு தொல்புரத்தைச் சேர்ந்த செல்வரத்தினம் சகிகரன் (வயது - 29) என்பவர் வவுனியா நலன்புரி முகாமில் வைத்து இராணுவத்தினால் 06.05.2009 இல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். நெடுந்தீவு கடறபடை முகாம் தாக்குதலில் பங்கு கொண்டார் என இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கடந்த தை மாதம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பொலிஸ் உயர அதிகாரி ஒருவருக்கு இவரால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் அவரது சுயவிருப்பத்தின் பேரில் வழங்கப்படவில்லை என்றும், பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டே பெறப்பட்டது எனவும் இவரது சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி மு.றெமிடியஸ் வாதாடியிருந்தார். இதனை விசாரணை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் கடந்த மாதம் 5ஆம் திகதி இக்குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியிருந்தார்.

எதிரிக்கு எதிராக வேறு சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காக வழக்கு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. நேற்று வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் இல்லை என அரச தரப்பினால் தெரிவிக்கப்பட்டதையடுத்து எதிரியை விடுதலை செய்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் தீர்பளித்தார்.

எதிரி சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் ஆஜரானார். அரச தரப்பில் அரச சட்டவாதி நளினி கந்தசாமி ஆஜராகியிருந்தார். (137)

# முருகண்டி விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் பலி

(கிளிநொச்சி)

முருகண்டிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தனியார் பேருந்து - மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர ஸ்தலத்தில் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் இரவு 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன், யாழ். - கொழும்பு சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த நிலையில் பழைய முருகண்டிப் பகுதியில் பேருந்தும் எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த போக்குவரத்துப் பிரிவு பொலிஸ உத்தியோகத்தரும் மோதியதில் உத்தியோகத்தர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளார்.

இதில் மாங்குளம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த எஸ்.ஏ.நிசங்க பண்டார (வயது - 25) என்ற உத்தியோகத்தரே மரணமடைந்தவராவார். இவர் மாத்தறையைச் சேர்ந்தவராவார். (77)

# நாடுகடத்தப்பட்டவர்கள் இலங்கையில் துன்புறுத்தப்படவில்லை

## அவுஸ்ரேலிய அமைச்சர் சொல்கிறார்

நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் துன்புறுத்தப்பட்டமைக்கான எவ்வித ஆதாரங்களும் கிடையாது என அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பொவன் தெரிவித்துள்ளார்.

புகலிடம் கோரி அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசித்த இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்ட போதிலும் அவர்கள் அங்கு துன்புறுத்தப்பட்டமைக்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்ந்தும் நாடு கடத்தப்படுவர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். புகலிடம் கோருவோரில் பலர் பொருளாதார நோக்கங்களை முதனிலையாகக் கொண்டவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நபர்களை நாடு கடத்துவது மிகவும் பொருத்தமானது இதில் எவ்வித தவறும் கிடையாது. சட்டவிரோதமான முறையில் நாட்டை விட்டு வெளியேறிச் செல்வோரிடம் பொலிஸார் விசாரணை நடத்துவதனை துன்புறுத்தல்களாக கருதப்பட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருளாதார நோக்கங்களுக்காக அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசிக்கும் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் மிகவும் பொருத்தமானது என அவர் தெரிவித்துள்ளார்.

# காந்திசிலை உடைப்பு எதிரிகள் மூவரும் விடுதலை

(திருநெல்வேலி)

அரியாலை காந்தி சிலை உடைப்பு வழக்கில் எதிரிகள் மூவரும் யாழ். நீதிமன்ற நீதவான் பி.சிவகுமாரினால் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அரியாலையில் அமைக்கப்பட்டிருந்த மகாத்மா காந்தி சிலை கடந்த 28.07.2012 அன்று இரவு உடைக்கப்பட்டது. இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் மூவரைக கைது செய்திருந்தனர்.

யாழ். நீதவான் நீதிமன்றில் இவர்களை முன்னிலைப்படுத்தியபோது இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான உத்தரவிட்டிருந்தார். பின்னர் இவர்கள் பிணையில் விடப்பட்டிருந்தனர்.

நேற்று இவ்வழக்கு யாழ். நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது விசாரணையை மேற கொண்ட நீதவான் இவர்களை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

கந்தையா தேவதீசன், சுப்பிரமணியம் திவாகரன், காசிப்பிள்ளை சத்தியானந்தன் ஆகிய மூவருமே விடுதலை செய்யப்பட்டவராவார். இவர்கள் சார்பில் சட்டத்தரணி வீ.ரி.சிவலிங்கம் ஆஜராகியிருந்தார். (137)

### மாகாணசபை...

முறைமையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தை பல வருடகாலமாக வலியுறுத்திவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின்பேரில் இக்கூட்டம் நடைபெற்றது.

சுமார் மூன்று மணிநேரமாக நடைபெற்ற இக்கூட்டத்தின் முடிவில் மீண்டும் இன்றைய தினமும் இக்கூட்டத்தினை தொடருவது எனவும் இதனை படிப்படியாக விஸ்தரிப்பது எனவும் கூட்டத்தின் முடிவுகளை அறிக்கையாக மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொணடவர்கள் மிகவும் ஆக்கபூர்வமான பல கருத்துக்களை முன் வைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

முற்போக்கு மற்றும் இடதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட முஸ்லிம் உறுப்பினர்கள், மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் 13 ஆவது திருத்த அமுலாக்கத்தை வலியுறுத்தும் அமைச்சர்கள் மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் இக் கூட்டத்தில் கலந்துகொ்ண்டனர்.

### தெரிவுக்குழுவில்...

கூட்டிய தீர்மானங்களை எடுத்துவிட்டதாக தாங்கள் உணர்ந்ததாகவும், இவர்களின் விசாரணையில் தங்களுக்கு நியாயம் கிடைக்காது என்பதால் நேற்றைய விசாரணைகளில் இருந்து தாங்கள் வெளிநடப்புச் செய்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நேற்றைய நிகழ்வுகள் குறித்து பி.பி.சி.யிடம் கருத்துத் தெரிவித்த, தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன கிரியல்ல, இந்தத் தெரிவுக்குழு செயற்படத்துவங்கிய நாள் (நவம்பர் 14 ஆம திகதி) முதல் நேற்று•வரை எதிர்த்தரப்புக்கு (ஷிராணி தரப்புக்கு) எந்த ஆவணங்களும் அளிககப்படவில்லை என்று கூறினார்.

முதல்முறையாக நேற்று அவர்களுக்கு சுமார் ஐம்பது ஆவணங்கள் அளிக்கப்பட்டதாகவும், அவற்றுக்கான பதில்களை ஷிராணி தரப்பு வழக்கறிஞர்கள் இன்று மதியம் அளிக்கவேண்டும் என்று கூறப்பட்டதாகவும் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

இந்த ஆவணங்களைப் படித்துப்பார்க்கவும், இதில் கூறப்பட்டுள்ள சாட்சியங்கள் குறித்து ஆராயவும் தமக்கு மேலதிக அவகாசம தேவை என்று ஷிராணி தரப்பு வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்ததாக தெரிவித்த லக்ஷ்மன் கிரியல்ல, அவர்களின் இந்தக் கோரிக்கை ஏற்கப்படாமல் நிராகரிக்கப்பட்டதாகவும் கூறினார். இந்தக் கோரிக்கைகளை நிராகரிக்கும்போது ஆளும் அரசு தரப்பு உறுப்பினர்கள் மோசமான வார்த்தைகளை பயன்படுத்தியதாகவும் கிரியல்ல தெரிவித்தார்.

இந்த விசாரணை நடைமுறைகள் நீதியாகவும் நேர்மையாகவும் இருக்காது என்று தாங்கள் நினைப்பதாக தெரிவித்த தலைமை நீதிபதியும் அவரது வழக்கறிஞர்களும் வெளிநடப்புச் செய்ததாகவும் கிரியல்ல பி.பி.சி.யிடம் கூறினார்.

# யாழ். மருத்துவமனையில் சுகயீனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் நேற்றுப் பிற்பகல் அரைநாள் சுகயீன விடுமுறைப் போராட்டமொன்றை யாழ். போதனா வைத்தியசாலையில் முன்னெடுத்தனர்.

நாடுபூராகவுமுள்ள அரச வைத்தியசாலைகளின் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் நான்கு கோரிக்கைகளை முன்நிறுத்தி நேற்று மேற்கொண்ட இத்தகைய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்று மதியம் 12.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை இந்தப் போராட்டம் காரணமாக அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனைய வேலைகள் நடைபெறவில்லை. இதனால் நோயாளர்கள் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருந்தது.

குறைந்த கல்வித் தகைமையுடைய தனியார் நிறுவனங்களில் இங்கை மருத்துவ சங்கத்தின் அனுமதியுடன் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களுக்கு பயிற்சியளிப்பது நிறுத்தப்பட வேண்டும், தகுதியற்றவர்களால் நடத்தப்படும் மருத்துவ ஆய்வுகூடத் தொழில நுட்ப சேவை தடைசெய்யப்பட வேண்டும், பல்கலைக் கழகங்களில் இணை மருத்து வப்பட்டம் பெற்றவர்கள் இணைத்துக் கொள்ளப்படுதல், நாடு பூராகவும் இந்த நடைமுறையை அமுல் படுத்துதல் உள்ளிட்ட நான்கு கோரிக்கைகளை முன் வைத்தே அவர்கள் இந்த சுகயீன விடுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போராட்டம் காரணமாக வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளர்களின் பாதிப்பைத் தவிர்க்கும் முகமாக மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள் இருவர் வீதம் ஒவ்வொரு பிரிவிலும் கடமையில் ஈடுபட்டிருந்ததாகவும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.(பா,இ)

### வடக்கின்...

போரின் போது, ஐக்கிய நாடுகள் அமைப்பு செயற்பட விதம் தொடர்பாக உள்ளக அறிக்கையொன்று அண்மையில் செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டது. இந்த அறிக்கையில் ஐக்கிய நாடுககள் சபை அதிகாரிகளின் செயற்பாடுகள் விமர்சிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில், இந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் குறித்து ஆராய இந்த விசேட உபகுழுவை ஐக்கிய நாடுகள் அமைப்பு நியமித்துள்ளது. மேற்படி குழுவின் தலைவராக அமைப்பின் பிரதி பொதுச் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளதாக நெசர்கி கூறியுள்ளார்.

### குடும்பஸ்தரின்...

சோதிலிங்கம் (வயது - 31) என்ற இக்குடும்பஸ்தரின் சடலம் மருதங்கேணி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து சாவகச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. இன்று பிரேத பரிசோதனை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (116)


### வெலிக்கடையில்...

குறிப்பாக சட்டம் ஒழுங்கு மற்றும் தனிப்பட்ட நபர் சுதந்திரம் தொடர்பான விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. அடக்குமுறைகள் எதுவுமின்றி அனைத்து பிரஜைகளும் தங்களது கருத்துக்களை வெளியிடக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

### யாழ். பல்கலை...

மாணவர்கள் ஐவரையும், மருத்துவ பீடாதிபதி மற்றும் அம் மாணவர்களது பெற்றோர்கள் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அத்துடன் முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவன், முகாமைத்துவ பீடாதிபதி மற்றும் துணைத் தலைவருடன் பொலிஸில் சரணடைந்துள்ளார். (இ)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடமைப்பு உதவி இன்னும் தேவை



(கொழும்பு)

கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பாக வன்னி மாவட்டங்களில் தமது சொந்த வீடுகளை இழந்துள்ளனர் இன்று அவர்கள் மீள்குடியேறி நான்கு வருடங்களை நெருங்கும் இவ் வேளையில் கிட்டத்தட்ட 50 வீதமானோர் தான் நிரந்தர வீட்டு உதவிகளைப் பெற்றிருக்கின்றனர்.

ஆகவே வீடமைப்பு அமைச்சு மேற்படி வீடு இல்லாத மக்களின் நிலைமைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு கணிசமான வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வர வேண்டும்.

வீடமைப்பு அதிகார சபையூடாக வழங்கப்படும் வீட்டுத்திட்டத்திற்கு 2 இலட்சம் ரூபா மட்டும் இலகு கடன் வழங்கப்படுகிறது. இன்றைய வீடு கட்டுமான பொருட்களின் விலை அதிகரிப்பால் இப் பணத்தில் வீட்டை முழுமையாக்க முடியாது. ஆகவே குறைந்த பட்சம் 5 இலட்சம் ரூபாவானது வழங்க முன்வர வேண்டும்.

அரச ஊழியர்களுக்கு வழங்கும் 5 இலட்சம் ரூபா கடன் போன்று ஏனையவர்களுக்கும் வழங்குவதற்கு வீடமைப்பு அதிகார சபை முன்வர வேண்டும் என்று ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் நாடாளுமன்றில் உரைநிகழ்த்தும் போது தெரிவித்தார்.

வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சுக்கான வரவு - செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் நேற்றுக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்துக்குப் பிந்திய சூழலில் இனங்களுக்கிடையேயான முரண்பாடுளைத் தீர்த்துக்கொள்ளுதலின் முக்கியத்துவத்தோடு பாதிக்கப்பட்ட மக்களின் நாளாந்த வாழ்வு மற்றும் நடைமுறை சார்ந்த பிரச்சினைகளின் தீர்வும் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக அமைந்திருக்கின்றது. இந்த அடிப்படையில் நாளாந்த வாழ்வின் பிரச்சினைகள் பல தீர்வு நோக்கி நகர்ந்துள்ளமை இந்த அரசாங்கத்தின் வெற்றிகரமான சாதனையாக அமைந்திருக்கின்றது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பல்வேறு வகையான உட்கட்டுமாணப பணிகள் நிறைவடைந்துள்ளமையை யாரும் மறுக்க முடியாது. சொந்த இடங்களுக்குத் திரும்புதல் என்பது பெரும்பாலான மக்களுக்குச் சாத்தியமாகியுள்ளது. ஆனால் அவர்களுக்கான வீடு இன்மை, தொழிலின்மை என்பதனை பூரணப்படுத்துவதற்கான தொடர் முயற்சிகள் இன்னமும் தேவைப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவிலும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் கரம்பகம், எழுதுமட்டுவாழ், தெற்கு கிராமசேவகர் பிரிவுகளிலும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலும் வீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியாகின்றது. ஏறக்குறை 1000 வீடுகள் தேவைப்படும் இப்பிரதேசங்களில் 397 வீடுகள் இந்திய உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ளது. இவற்றைவிட காணியற்றவர்களாகக் காணப்படுபவர்கள் பலர் இன்னமும் வீடற்றவர்களாக யாழ்.மாவட்டத்தில் காணப்படுகின்றனர். இவர்களுக்கான வீட்டுத்திட்டங்களை தேசிய வீடமைப்பு அதிகார சபை ஊடாகத் தீர்த்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை 22 ஆயிரத்து 790 வீடுகள் முழுமையாகவும் 6 ஆயித்து 400 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. இதுவரை 8 ஆயிரத்து 70 வீடுகள் வட, கிழக்கு வீடுகள் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமும், யூ.என். கபிற்றற் மூலமும் சுவிஸ் அபிவிருதிக் கூட்டுறவு மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பங்களிப்புடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட 200 வீடுகள் வீடமைப்பு அதிகார சபை மூலம் நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் 14 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. இவை பெரும்பாலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பின் தங்கிய பிரதேசங்களுக்கே வழங்கப்பட வேண்டியுள்ளது. பகுதியாகச் சேதமடைந்த 6 ஆயிரத்து 400 வீடுகளில் தற்போது 2 ஆயிரத்து 200 வீடுகள் பகுதித் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

எல்லோருக்கும் வீடு என்கின்ற உயரிய இலக்குடன் அரசு செயற்படுகிறது. இந்த அடிப்படையில் மிகுதி 14 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவும் 4 ஆயிரத்து 200 வீடுகளின் பகுதிச் சேதம் திருத்தப்படவும் நடவடிக்கை எடுக்கப்படுவது அவசிமாகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஊடகங்களுக்கு ஒழுக்க விதிகள்

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் ஊடகங்களுக்கு ஒழுக்க விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென அமைச்சர் அனுர பிரியதர்சன யாபா கோரியுள்ளார். பிரதம நீதியரசருக்கு. எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகள் தொடர்பில் ஊடகங்கள் கருத்து வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களின் நடவடிக்கைகள் நாடாளுமன்றின் சிறப்புரிமைகளை மீறும் வகையில் அமையக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஒழுக்கவிதிகளை வெளியிடுமாறு, அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, சபாநாயகர் சமால் ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.

## தேசிய சுகாதார வாரம்

(கொழும்பு)

இம்மாதம் 10ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை தேசிய சுகாதார வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளன நிலையில் இந்த தேசிய வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்று நோய்களைத் தடுப்பதற்காக தேசிய மற்றும் கிராமிய ரீதியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா அன்னப்பிள்ளை



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அன்னப்பிள்ளை நேற்று (06.12.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், அமரர் பிள்ளையார் செல்லையாவின் அன்பு மனைவியும், சண்முகவடிவேல் (காலம் சென்ற அதிபர்), அம்பிகாவதி (கனடா), சிவராசா, திலகாவதி, சீவரட்ணம் (வலயக் கல்விப் பணிப்பாளர் - கம்பளை), கமலாவதி, லீலாவதி (யாழ். போதனா வைத்தியசாலை), விமலாவதி, பாஸ்கரன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரியம்மா (முன்னாள் ஆசிரியர்), மகேஸ்வரி (ஓய்வுபெற்ற உப அஞ்சல் அலுவலர், வேலணை), சோமசுந்தரம் (கனடா), புஸ்பராணி, ஜோர்ச், யோகராணி, தருமானந்தம், அல்ரெட் (வத்தளை பொலிஸ் அதிபர்), விஜயகுமார் (அமரர்), சுசிலா (இலண்டன்) ஆகியோரின் மாமியாருமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2012) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாளையம்பதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
வேலணை-06.

தகவல் : குடும்பத்தினர்

(C/1764)

## கைத்தொலைபேசிக்கு இறுக்கமான தடை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்குள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் தவிர ஏனைய எவரும் கையடக்கத் தொலைபேசிகளை எடுத்துச்செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களும் பரீட்சை நடவடிக்கைகள் தொடர்பில் மாத்திரமே கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்த வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவுறுத்தலை பின்பற்றத் தவறுவோர் தொடர்பில் பரீட்சைகள் சட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

## முன்பள்ளி ஆசிரியர்களாக முன்னாள் போராளிகள்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்களாக புனர்வாழ்வு பயிற்களை பெற்ற 400 முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகள் நியமிக்கப்பட உள்ளனர்.

விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளை சிவில் பாதுகாப்பு படையில் இணைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் படி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமால் ராஜபக்ஷவின் எண்ணக்கருவிற்கு அமைய சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் ரியர் அத்மிரல் ஆனந்த பீரிஸின் வழி நடத்தலின் கீழ் இந்த வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

முன்பள்ளி ஆசிரியர்களாக இணைத்து. கொள்ளப்பட்டுள்ளவர்களின் குறித்த பிரதேசங்களை சேர்ந்த சிவில் வாசிகளும் அடங்குகின்றனர். முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. கத்தோலிக்க கன்னியாஸ்திரி ஒருவரும், முன்பள்ளி ஆசிரியைக்கான நியமனத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

## அனர்த்தங்களுக்கு முகம்கொடுப்பது எப்படி?

அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பது எப்படி என்று இராணுவத்தினருக்கு விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதன் முதற்கட்டமாக எதிர்கால அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில், நாடு முழுவதிலும் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து 25 இராணுவவீரர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

## ஸ்கொட்லாந்தில் இலங்கையர்கள் கைது

ஸ்கொட்லாந்தில் இலங்கையர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் தொழில்களில் ஈடுபட்டிருந்த 17 வெளிநாட்டுப் பிரஜைகளை ஸ்கொட்லாந்து அதிகாரிகள் கைது செய்துள்ளனர். பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக ஸ்கொட்லாந்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## இலங்கையரை நாடு கடத்த பிரித்தானியாவும் முஸ்தீபு

பிரித்தானியாவுக்கு அகதிகளாகச் சென்ற இலங்கையர்களில் சிலரை திருப்பி அனுப்ப அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்நாட்டு குடியுரிமை மறுக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லண்டன் எல்லை வரையரை முகவரகம் தெரிவித்துள்ளது.

மேற்படி பிரித்தானிய குடியுரிமை மறுக்கப்பட்ட இலங்கையர் குழு அடங்கிய விசேட விமானமொன்று லண்டனிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்க தயாராக உள்ளதென குறித்த முகவரகம் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு நாடு திரும்பவுள்ளவர்கள் அனைவரும் லண்டனில் தங்கியிருந்தவர்கள் என்றும் அம்முகவரகம் மேலும் கூறியுள்ளது.

## இருவர் கைது

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் இருவரைப் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர். வல்வெட்டித்துறை ஊறணி குடியேற்றத்திட்டப் பகுதியில் சிவசம்பு பிரசாத் (வயது -24) அருளம்பலம் கிசோக்குமார் (வயது - 22) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த சனிக்கிழமை மற்றும் நேற்று முனதினமும் கைது செய்யப்பட்டுள்ளனர். தீருவில் பகுதியில் அண்மையில் புலிக்கொடி ஏற்றிய விவகாரங்கள் தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இதேவேளை சிவசம்பு பிரசாத் காணாமல் போயுள்ளதாக வெளியான செய்தி உள்ளே) (116)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.